விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 24
ஒலி 340 வள்ளுவர் ஆண்டு 2054 கார்த்திகை 08 வெள்ளிக்கிழமை (24.11.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

## அரசியல் தீர்வொன்றை வடக்குக்கு வழங்குவோம்

### சபையில் ஜனாதிபதி ரணில்

(கொழும்பு)

வடக்குக்கு அரசியல் தீர்வு வழங்கி வடக்கு மாகாணத்தை அபிவிருத்தி செய்ய நடவடிக்கை எடுப்போம் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.



பாராளுமன்றில் உரையாற்றும்போதே மேற்கண்ட வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அரசியலமைப்பு பேரவையின் ஒரு சில உறுப் பினர்களின் செயற்பாடுகளினால் நெருக்கடி நிலை தோற்றம் பெற்றுள் 15

### மட்டக்களப்பில் அமைக்கப்பட்டிருந்த
## மாவீரர் நினைவுத் தூபி பொலிஸாரால் அகற்றம்



(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு தரவை மாவீரர் துயிலும் இல்லத்தில் அமைக்கப்பட்டு வந்த நினைவு தூபி 15

### சித்தங்கேணி இளைஞன் மரணம்
## யாழ்.நீதவான் நீதிமன்றில் இன்று வழக்கு விசாரணை

(யாழ்ப்பாணம்)

பொலிஸாரின் சித்திரவதையால் உயிரிழந்த சித்தங்கேணி இளைஞன் தொடர்பிலான வழக்கு விசாரணைகள் இன்று வெள்ளிக்கிழமை யாழ்.நீதவான் நீதிமன்றில் முன்னெடுக்கப்படவுள்ளது.

இளைஞன் உயிரிழந்தது, யாழ்.நீதவான் 15

# ராஜபக்ஷக்களின் குடியுரிமை இரத்துச் செய்யப்பட வேண்டும்

### சஜித் தலைமையில் கையெழுத்து வேட்டை

(கொழும்பு)

நாட்டை வங்குரோத்து அடையச் செய்த ராஜபக்ஷர்களின் குடியுரிமை இரத்துச் செய்யப்பட வேண்டும் எனத் தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையில் கையெழுத்து வேட்டை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. (04ஆம் பக்கம் பார்க்க)



### புலிகளின் ஆயுதங்களை தேடி அகழ்வு

(முல்லைத்தீவு)

போரின் இறுதி நாட்களில் முள்ளிவாய்க்கால் மேற்கு பகுதியில் உள்ள கடற்கரை பகுதி ஒன்றில் விடுதலைப் புலிகளால் புதைத்து வைத்ததாக நம்பப்படும் இடம் ஒன்றினை நீதிமன்ற 04

### நெருக்கடிகளுக்கு ராஜபக்ஷக்களும் காரணம் - ரணில்

(கொழும்பு)

இலங்கை தற்போது எதிர்கொண்டுள்ள நிதி நெருக்கடிக்கு ராஜபக்ஷக்களும் காரணம் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். 04

## சந்தேகநபரை பிடிக்க ஆற்றுக்குள் பாய்ந்த



### சாவகச்சேரியைச் சேர்ந்த தமிழ்ப் பொலிஸ் மரணம்

(யாழ்ப்பாணம்)

சந்தேகநபரைப் பிடிக்க ஆற்றுக்குள் பாய்ந்த சாவகச்சேரியைச் 15

## இனவாதக் கருத்துக்களின் வெளிப்பாடே நாட்டின் 30 வருட கால யுத்தம்



### ஜே.வி.பி தலைவர் அநுர குமார

(கொழும்பு)

இனவாத கருத்துக்களின் வெளிப்பாடுகளினால்தான் 30 வருட கால யுத்தம் தோற்றுவிக்கப்பட்டது என மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுர குமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார். 15

## ரணில் - சஜித் சபையில் காரசார வாக்குவாதம்

(கொழும்பு)

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவுக்கும் இடையில் சபையில் வாக்குவாதமொன்று இடம்பெற்றுள்ளது.

குறித்த சம்பவம் பாராளுமன்றத்தில் நேற்று நடைபெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய 04

### பாதுகாப்புக்கான நிதி ஒதுக்கீடு
#### சபையில் நிறைவேற்றம்

(கொழும்பு)

2024 ஒதுக்கீட்டுச் சட்ட மூலத்தின் குழுநிலை விவாதத்தின் இரண்டாவது நாளான நேற்று விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட பாதுகாப்பு அமைச் 15

### மல்லாவியில் விபத்து
## கண்ணிவெடி அகற்றும் பணியாளர் உயிரிழப்பு



(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு - மல்லாவி அணிஞ்சியன்குளம் பகுதியில் நேற்றுக் காலை இடம்பெற்ற விபத்தில் ஒருவர் உயிரிழந்ததுடன் மேலும் ஒருவர் படுகாயமடைந்துள்ளார். 15

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறாதென்றும் காக்கும் உங்கள் நாளிதழ்

# பாராட்டி வாழ்த்துகின்றோம்

congratulations

## யா/நல்லூர் காசிப்பிள்ளை வித்தியாலயம்

2023 ஆம் ஆண்டு தேசிய தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் வெட்டுப்புள்ளிக்கு மேல் பெற்று சித்தியடைந்த மாணவர்கள்


சி.சியாம் 175 புள்ளி


கி.சஞ்ஜித்குமார் 160 புள்ளி


கி.கிறித்திக் 155 புள்ளி


நி.நிவிஷ்ணு 152 புள்ளி


சி.கானுசா 145 புள்ளி


பா.பானுஜா 145 புள்ளி

**100 புள்ளிகளுக்கு மேல் பெற்றுக்கொண்ட மாணவர்கள்**

1. து.வகிஸ் 2. து.விதுர்சிகா 3. த.டிசான் 4. ரா.கன்சிகா 5. ட.கிஷாளினி
6. வி.கபிஷா 7. ம.ஏஞ்சல் 8. யு.ஹர்சிகா 9. நி.பவிஸ்கா 10. கி.தீபிகன்

**70 புள்ளிகளுக்கு மேல் பெற்றுக்கொண்ட மாணவர்கள்**

1. ர.அபிராமி 2. ர.கஸ்வினியா 3. க.டனுசிகன் 4. றொ.பெ.ஓசியா
5. ஞா.கௌதம் 6. தி.அதிசியா 7. கோ.சுபசிறி 8. ஜ.சங்கீர்த்தனா

2023 ஆம் ஆண்டு தேசிய தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மேற்படி மாணவர்கள் அனைவரையும் வாழ்த்துவதுடன் அவர்களை வழிப்படுத்திய அதிபர், ஆசிரியர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

(C-7710)

பாடசாலைச் சமூகம், யா/நல்லூர் காசிப்பிள்ளை வித்தியாலயம்


# யாழை சேர்ந்த இளம் பெண் நீதிபதியாக தெரிவு

இலங்கை நீதித்துறை வரலாற்றில் மிக இளவயதில் நீதிபதியாக யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த தமிழ் பெண் ஒருவர் தேர்வாகியுள்ளார்.

வரலாற்றில் மிக இள வயது தமிழ் பெண் நீதிபதியாக யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த மாதுரி நிரோசன் என்பவரே இவ்வாறு சாதனை படைத்துள்ளார்.

இவர் எதிர்வரும் 1 ஆம் திகதி பதவிப்பிரமாணம் செய்யவுள்ளார்.

யா/சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரியின் பழைய மாணவியான இவர் தனது 31வது வயதில் நீதிபதியாக பதவியேற்கவுள்ளார்.



மாதுரி நிரோசன் நாடளாவிய நீதியில் இடம்பெற்ற நீதிபதிகளுக்கான தேர்வில் அகில இலங்கை ரீதியில் 12ஆவது இடத்தை பிடித்துள்ளார். (ம-7)

# சுன்னாகம் பொலிஸ் பிரிவில் போதை மாத்திரைகளுடன் இருவர் பொலிஸாரால் கைது

சுன்னாகம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட குப்பிளான் பகுதியில் 30 போதை மாத்திரைகளுடன் சந்தேகநபர் ஒருவர் நேற்று முன்தினம் பொலிஸ் விசேட அதிரடிப் படையினரால் கைது செய்யப்பட்டு சுன்னாகம் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார்.

இதேவேளை நேற்று 100 போதை மாத்திரைகளுடன் ஏழாலை தெற்கு மயிலங்காடு பகுதியில் சந்தேகபர் ஒருவர் சுன்னாகம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகபர்கள் இருவரையும் நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7,104)


**வலம்புரி** விளம்பரத் தொடர்புகளுக்கு

**076 636 3378, 076 097 3127**



# கண்ணீர் அஞ்சலி

வடக்கு மாகாணத்தின் கௌரவ ஆளுநர்
திருமதி P.S.M. சார்ள்ஸ் அவர்களின் அன்புத் தாயார்

அமரர் **மேரி ஜோசப்பின் அமிர்தரத்தினம்**



அவர்களின் பிரிவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**இலங்கை தொழில்நுட்பவியல் சேவையாளர் சங்கம், வடமாகாணம்**

(17977)


# மரண அறிவித்தல்

தோற்றம் 16 . 04 . 1940



மறைவு 23 . 11 . 2023

## செல்லையா மார்க்கண்டு

(முன்னாள் பச்சிலைப்பள்ளி பலநோக்கு கூட்டுறவுச் சங்கத் தலைவர்
முன்னாள் RDS தலைவர்
இத்தாவில் கெனடி விளையாட்டுக்கழக ஸ்தாபகர்
முன்னாள் சரஸ்வதி சனசமூக தலைவர்)

இத்தாவில் பளையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா மார்க்கண்டு நேற்று (23.11.2023) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லையா - வள்ளிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற காசிப்பிள்ளை - நாகமுத்து தம்பதியரின் அன்பு மருமகனும் அன்னலட்சுமியின் பாசமிகு கணவரும் பாலசிங்கம் (கனடா), சின்னம்மா (லண்டன்), காலஞ்சென்ற சிவக்கொழுந்து (ஆசிரியர்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் இரத்தினசிங்கம், துரைராஜா, தவகுலசிங்கம் ஆகியோரின் மைத்துனரும் மாலினியின் அன்புத் தந்தையும் சாள்டன் றோய் அவர்களின் அன்பு மாமனாரும் கபிசன், கபினா, கபிநயா ஆகி யோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று வெள்ளிக்கிழமை (24.11.2023) அவரது இல்லத்தில் நடைபெற்று நண்பகல் ஒரு மணியளவில் அன்னாரின் பூதவுடல் அரசர்கேணி புண்ணியடி இந்து மயானத்துக்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இத்தாவில்,
பளை.

(C-7713)

தகவல் : குடும்பத்தினர்
சாள்டன் : 077 821 0148


# காணி விற்பனைக்கு

## யாழ்ப்பாணம் இராசபாதை வீதியில் 06 பரப்பு காணி விற்பனைக்குண்டு.

### நிலப்பரப்பு

- பிரதான இராச பாதையும் G.P.S விளையாட்டரங்க வீதியும் இணையும் பிரதான சந்தி முகப்புடன் உள்ளது.
- 18 அடி பாதையுடன்.
- 4 பரப்பாகவும் 2 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- திருமண மண்டபங்கள், அனைத்து விதமான வியாபார நிலையங்கள், வீடுகள் கட்டுவதற்கு உகந்த இடம்.
- குடியிருப்புக்கள் சூழவுள்ள பகுதி.
- நன்னீர் ஊற்று.
- இக் காணியில் இருந்து கல்வியங்காடு பிரதான சந்தை 1 1/2 Km,
- திருநெல்வேலி பிரதான சந்தை 1 1/2 Km, நல்லூர் கந்தசாமி ஆலயம் 2 Km, திருநெல்வேலி நொதேன் வைத்தியசாலை 2 Km

விலை நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

பார்வையிடும் நேரம் :
காலை 6 மணி முதல் மாலை 6 மணி வரை

(17975)


தொடர்புகளுக்கு : ஜெயம்

**077 814 7389, 077 986 5457**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

பிறப்பு 1952 • 12 • 17



இறப்பு 2023 • 11 • 22

## அமரர். இரத்தினசிங்கம் பொன்னம்பலநாதன் (துரை)

(முன்னாள் கரைச்சி பிரதேசசபை உறுப்பினர், முன்னாள் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர், முன்னாள் கிளி.திருவையாறு மகாவித்தியாலய பாடசாலை அபிவிருத்திச் சங்க செயலாளர், முன்னாள் படித்த விவசாய கூட்டுறவுச்சங்க தலைவர், சி.க.உ.கூட்டுறவுச்சங்க பொருளாளர்)

மண்டைதீவை பிறப்பிடமாகவும் 50/1, திருவையாறு, கிளிநொச்சியை வசிப்பிடமாகவும் கொண்ட இரத்தினசிங்கம் பொன்னம்பலநாதன் (துரை) அவர்கள் 22.11.2023 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இரத்தினசிங்கம் கனகமணி தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான கந்தையா நாகம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும் பாக்கியரஞ்சினியின் பாசமிகு கணவரும் தினேஸ்குமார்(மாவீரர்), நதீஸ்குமார் (அறிவிப்பாளர்), றஜீஸ்குமார் (பிரான்ஸ்), ஜனீஸ்குமார் (தனியார் வங்கி உத்தியோகத்தர்), பிருந்தா, கஜானா ஆகியோரின் அன்புத் தந்தையும் சந்தானலட்சுமி, காலஞ்சென்ற சரவணபவானந்தன் (வேல்முருகா) மற்றும் வசந்தமலர், சிறீதேவி ஆகியோரின் அன்பு சகோதரனும் காயத்திரி, செந்தினி, ஜென்சா ஆகியோரின் அன்பு மாமனாரும் பிரசன்யா, கிரிஸ்வின் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 24.11.2023 இன்று வெள்ளிக்கிழமை காலை 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக இரணைமடு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

50/1 திருவையாறு,
கிளிநொச்சி.

தொடர்புகளுக்கு:
பொ.நதீஸ் - 0094777406282
பொ.றஜீஸ் - 0033751160315
பொ.[illegible] - 0094771792862

தகவல் :
குடும்பத்தினர்.

(சி-7709)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## புலிகளின்...

உத்தரவுக்கு அமைய. தோண்டும் நடவடிக்கை நேற்று காலை முன்னெடுக்கப்பட்ட நிலையில் தற் காலிகமாக நேற்று மூன்று மணியுடன் இடைநிறுத்தப்பட்டு மீண்டும் இன்று அகழ்வு பணிகள் தொடரப்பட இருக்கின்றது.

இது தொடர்பான வழக்கு கடந்த 19.11.23 அன்று முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றில் தொடரப்பட்டுள்ளது. முல்லைத்தீவு பொலிஸின் விசேட புலனாய்வாளர்களுக்கு கிடைக்கப்பெற்ற தகவலுக்கு அமைய குறித்த பகுதியில் விடுதலைப் புலிகள் ஆயுதங்கள் மற்றும் பெறுமதியான பொருட்களை புதைத்து வைத்துள்ளதாக நம்பப்படும் இடத்தில் தோண்டுவதற்கு நீதிமன்றத்தில் கடந்த 19.11.23 அன்று வழக்கு தொடரப்பட்டு நீதிபதியின் அனுமதி பெறப்பட்டிருந்தது.

முல்லைத்தீவு நீதவான் நீதிமன்ற நீதிபதி தர்மலிங்கம் பிரதீபன் முன்னிலையில் பொலிஸார், விசேட அதிரடி படையினர், இராணுவத்தினர், கிராம சேவையாளர், தொல்லியல் திணைக்களத்தினர், சுகாதார பிரிவினர், தடயவியல் பொலிஸார் பிரசன்னத்துடன் குறித்த அகழ்வுப் பணி இடம்பெற்றிருந்தது.

கனரக இயந்திரம் கொண்டு தோண்டப்பட்டபோது நிலத்திலிருந்து நீர் வந்திருந்தது. ஆனால் நேற்றைய அகழ்வுப் பணிகளில் எந்தவொரு பொருட்களும் மீட்கப்படாத நிலையில் இன்று காலை 9 மணியளவில் மீண்டும் இரண்டாவது நாளாக பெரிய கனரக இயந்திரம் கொண்டு தோண்டும் நடவடிக்கை இடம்பெறவுள்ளது.

(ம-7,299)

## நெருக்கடி...

அதேவேளை தற்போது பிளவுபட்டுள்ள எதிர்க்கட்சியில் உள்ள அவரை விமர்சிப்பவர்களும் நிதி நெருக்கடிக்கு காரணமாகயிருந்தார்கள் எனத் தெரிவித்துள்ளார்

இந்திய ஊடகமொன்றிற்கு வழங்கிய பேட்டியில் அவர் இதனை தெரிவித்துள்ளார்.

மேலும் நான் ராஜபக்ஷ பரம்பரையின் பிரதிநிதியில்லை.

ஆளும் பொதுஜன பெரமுனவும் எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியும் தற்போது பிளவுபட்டுள்ளன.

அத்துடன் இலங்கை தனது தசாப்த கால வரலாற்றில் எதிர்கொண்ட மிக மோசமான நெருக்கடிக்கு முன்னாள் ஜனாதிபதிகள் மகிந்த கோட்டாபய ராஜபக்ஷ முன்னாள் நிதியமைச்சர் பசில் ராஜபக்ஷ ஆகியோரே காரணம் என்ற நீதிமன்றத்தின் தீர்ப்பினை ஏற்றுக்கொள்கின்றீர்களா? என்ற கேள்விக்கு, ஆம் உண்மையைத்தான் நீதிமன்றம் தெரிவித்துள்ளது என ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் நீதிமன்றத்தின் தீர்ப்பை ஏற்றுக்கொள்ளாத மனோநிலையில் காணப்பட்ட ஜனாதிபதி இந்த நெருக்கடிகள் அவர்கள் காலத்தில் இடம்பெற்றன எனக் குறிப்பிட்டுள்ளார்.

மே 2022 இல் மகிந்த ராஜபக்ஷ பதவி விலகிய பின்னரும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பதவிவிலகிய பின்னரும் ஆட்சிப் பொறுப்பை ஏற்பதற்கு எதிர்க்கட்சியினர் முன்வராததை சுட்டிக்காட்டியுள்ள அவர், இதன் காரணமாக முழு அரசியல் அமைப்பும் வீழ்ச்சியடைந்தது எனக் குறிப்பிட்டுள்ளார்.

ஆகவே இந்த நாட்டின் அரசியல் அதிகளவிற்கு தலைகீழாக காணப்பட்டது. அனைவரும் அதிகளவில் பொறுப்புணர்வு அற்ற விதத்தில் நடந்து கொண்டனர்.

ஆகவே அதனையும் நீங்கள் கருத்தில் கொள்ளவேண்டும் தனியாக ஒரு விடயத்தை மாத்திரம் கருத்தில் கொள்ள முடியாது என ஜனாதிபதி தெரிவித்துள்ளார். (ம-7)

## ராஜபக்ஷக்களின்...

நாட்டை வங்குரோத்து நிலைக்கு உட்படுத்திய ராஜபக்ஷர்களின் குடியுரிமையை இரத்துச் செய்யக் கோரி பொதுமக்களின் கையெழுத்தை திரட்டும் வேலைத்திட்டம் நேற்று புறக்கோட்டை புகையிரத நிலையத்திற்கு முன்பாக ஆரம்பிக்கப்பட்டது.

குறித்த கையெழுத்து திரட்டும் வேலைத்திட்டமானது நீதிக்கான மக்கள் ஆணையைக் கட்டியெழுப்புவோம் எனும் தொனிப்பொருளில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்த எதிர்க்கட்சி தலைவர்,

"ஊழல் கும்பல் எடுத்த தவறான முடிவுகளால் நாடு வங்குரோத்தான தன் காரணமாக, 220 இலட்சம் மக்கள் மற்றும் வர்த்தகர்களின் வாழ்வாதாரம் சீரழிந்துள்ள நிலையில் அவர்கள் நட்ட ஈட்டைப் பெற்றுக் கொள்ள இந்த தீர்ப்பின் ஊடாக வழிவகுக்கப்படுகின்றது.

இந்த கையொப்பத் திரட்டின் மூலம் ஒரு விசேட ஜனாதிபதி ஆணைக்குழு நிறுவப்பட்டு அதன் மூலம் நாட்டின் உயர் சட்டத்தின் பிரகாரம், நாட்டில் உள்ள 220 இலட்சம் மக்களின் அடிப்படை உரிமைகளை மீறிய அனைவரினதும் பிரஜா உரிமைகளை இல்லாதொழிக்க ஜனாதிபதியை நிர்ப்பந்திக்கும் செயற்பாடு மேற்கொள்ளப்பட வேண்டும்.

அவர்களுக்கு மீண்டும் தேர்தல்களுக்கு முன்நிற்க முடியாதவாறும், வாக்குரிமையும் பிரயோகிக்க முடியாதவாறும் உரிமைகள் மறுக்கப்பட வேண்டும்.

கிராமம் நகரமாக சென்று இலட்சக்கணக்கான கையெழுத்துக்களை திரட்டி, ஜனாதிபதி தொடர்ந்தும் ராஜபக்ஷ குடும்பத்தின் பாதுகாவலரும் அடிமையுமல்லாது மக்களின் பாதுகாவலராக இருக்க வேண்டியதை கட்டாயமாக்கும் செயற்பாடு இதனூடாக மேற்கொள்ளப்படுகின்றது.

220 இலட்சம் மக்களும் வீதிக்கு இறங்கி இந்த மனுவில் கையொப்பமிட்டு, 'ராஜபக்ஷர்களைப் பாதுகாக்காமல் அவர்களின் குடியுரிமைகளை சட்டபூர்வமாக இரத்து செய்' என்று ஜனாதிபதியை கட்டாயப்படுத்த முன்வாருங்கள்" என எதிர்க்கட்சித் தலைவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

இந்நிகழ்வில் ஐக்கிய மக்கள் சக்தியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பாராளுமன்ற உறுப்பினர்கள் பலர் கலந்து கொண்டதுடன் சமய தலைவர்கள் உட்பட பெருந்திரளான மக்கள் திரண்டு தங்களின் கையொப்பங்களை பதிவிட்டனர். (ம-7)

## ரணில் - சஜித்...

வருகையில், பாராளுமன்றத்தில் சஜித் பிரேமதாஸ உரையாற்றும் போது, ஒலிவாங்கி மற்றும் கேமராக்களை நிர்வகிப்பவர்கள் தங்களது கடமைகளை ஒழுங்காக செய்வதில்லை என்ற குற்றச்சாட்டை முன்வைத்தார்.

மேலும் இவ்வாறான நியாயமற்ற மற்றும் பக்கச்சார்பான செயற்பாடுகளுக்கு உடனடியாக தீர்வை பெற்றுத் தருமாறு சபாநாயகரிடம் கோரிக்கை விடுத்தார்.

இதனைத்தொடர்ந்து, எழுந்து நின்ற ஜனாதிபதி, "மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, நான் எதிர்க்கட்சி தலைவருடைய கருத்துடன் உடன்படுகின்றேன். தயவுசெய்து கமராக்களை எப்போதும் அவர் மீதே வைத்திருங்கள். என் மீது அவற்றை வைக்க வேண்டாம்" என்றார்.

இதற்கு பதிலளித்த சஜித், "ஜனாதிபதி அவர்களே, இது ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழு அல்ல. நான் ஒரு போதும் அவ்வாறு கூறவில்லை. எனது வார்த்தைகளை திரித்து நான் கூறியதை தவறாக சித்தரிக்க வேண்டாம்" என்றார். (ம-7)


### வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, புத்தூர்
### பெறுகை அறிவித்தல்

01. தலைவர், உள்ளூராட்சி மன்ற பெறுகைக்குழு, வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, புத்தூர் அவர்களினால் தகுதி வாய்ந்த வழங்குனர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ்க்குறிப்பிடப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட பெறுகைக்காக கோரப்படுகின்றது.

02. தேவையான தகைமைகள், பெறுகை ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

03. ஆர்வமுள்ள வழங்குனர்கள் வலிகாமம் கிழக்கு பிரதேசசபையின் தலைமை அலுவலகத்தில் மேலதிக தகவல்களை பெற்றுக்கொள்ளலாம். அத்துடன் மேற்கூறிய இடத்தில் வேலை நாட்களில் காலை 09.00 மணி முதல் பிற்பகல் 15.00 மணிவரை 24.11.2023 ஆம் திகதியிலிருந்து 07.12.2023 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் கேள்வி ஆவணங்களை பார்வையிடலாம்.

04. ஆர்வமுள்ள வழங்குனர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை யாழ்ப்பாணம் - பருத்தித்துறை வீதி, புத்தூர் எனும் முகவரியில் அமைந்துள்ள வலிகாமம் கிழக்கு பிரதேச சபையில் 24.11.2023 தொடக்கம் 07.12.2023 ஆம் திகதி வரை அலுவலக நாட்களில் மு.ப 9.00 மணி முதல் பிற்பகல் 15.00 மணி வரை மீளளிக்கப்படாத பணமாக ரூபா.1000/= (வற் தவிர்த்து) செலுத்தி பெற்றுக் கொள்ளலாம். இத்தொகை பணமாக செலுத்தப்படல் வேண்டும்.

05. கேள்வி ஆவணங்களினை பூரணப்படுத்தி 08.12.2023 ஆம் திகதி 15.00 மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியவாறு தலைவர், உள்ளூராட்சி அதிகார சபை பெறுகைக் குழு, வலிகாமம் கிழக்கு பிரதேசசபை, புத்தூர் எனும் முகவரிக்கு பதிவுத் தபாலிலோ அல்லது அலுவலகத்திலுள்ள பெறுகைப் பெட்டியினுள் நேரடியாகவோ இடப்படல் வேண்டும். காலந்தாழ்த்தப்பட்ட அல்லது பிந்திக்கிடைக்கும் பெறுகைகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகை தரும் பெறுகைதாரர் அல்லது அவர்களது பிரதிநிதி முன்னிலையில் திறக்கப்படும். கிடைக்கப்பெற்ற கேள்வியின் ஒரு பகுதியினை மட்டும் ஏற்றுக் கொள்வதற்கு அல்லது இப்பெறுகையை முழுமையாக இரத்து செய்வதற்கு பெறுகைக் குழுவிற்கு அதிகாரமுண்டு.

06. இக்கேள்வி கோரலில் உள்ள நிபந்தனைகளில் அவசியமேற்படுமிடத்து மாற்றத்தை ஏற்படுத்தல், சேர்த்தல் அல்லது இல்லாது செய்தல் என்பவற்றின் அதிகாரம் கேள்விச்சபைக்கு உண்டு.

| தொ. இல | பெறுகை விபரம் | எண்ணிக்கை | ஒப்பந்த இலக்கம். | ஒப்பந்த காலம் | கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | மீளளிக்கும் பிணை வைப்பு (ரூபா.) | வைப்பு செல்லுபடியாகும் காலம். |
| 1 | Desk Top Computer with UPS | 05 Nos | NP/14/41(13)/3/1/15/ Desk Top Computer (St. – II)/2023 | 14 நாட்கள் | 10,000.00 | 77 நாட்கள் (23.02.2024) |

தலைவர்,
உள்ளூராட்சி அதிகாரசபை பெறுகைக்குழு
வலிகாமம் கிழக்கு பிரதேச சபை,
புத்தூர்.

24.11.2023 (C-7711)



# கண்ணீர் அஞ்சலி

யாழ்.பல்கலைக்கழக நண்பன் எமில்
அவர்களின் பாசமிகு தந்தையார்

அமரர்
திரு.அ.சந்தியாப்பிள்ளை(தவம்)
(ஓய்வுபெற்ற நில அளவையாளர்)



அவர்களின் மரணச் செய்தி
அறிந்து துயரடைகின்றோம்.
அன்னாரின் இழப்பால்
துயருறும் அவர்தம்
குடும்பத்தினருக்கு எமது
ஆழ்ந்த அனுதாபங்களைத்
தெரிவிப்பதுடன் அவரின்
ஆத்மா சாந்தி பெற
இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

பிரிவால் துயருறும்
1989/90 யாழ்.பல்கலைக்கழக கலைப்பீட மாணவ நண்பர்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூடப்படும் அபாயத்தில் ஆடைக் கைத்தொழிற்சாலைகள்

(கொழும்பு)

நாட்டின் ஆடைக்கைத் தொழில்த்துறை பாரிய பின்னடைவை சந்தித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

குறிப்பாக இலங்கையில் இயங்கி வரும் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான ஆடைக் கைத்தொழிற்சாலைகளில் அரைவாசிக்கும் மேற்பட்டவை மூடப்பட்டுள்ளதாக சுதந்திர வர்த்தக வலைய முதலீட்டாளர் கள் சம்மேளனம் தெரிவித்துள்ளது.

இந்த சம்மேளனத்தின் பொதுச்செயலாளர் தம்மிக்க பெர்னாண்டோ இந்த விடய த்தை சுட்டிக்காட்டி உள்ளார்.

ஆடை உற்பத்தி செய்வதற் கான கோரிக்கைகள் குறைந்துள்ளதாகவும் உற்பத்திச் செலவு அதிகரித்துள்ளதாக வும் அவர் சுட்டிக்காட்டி உள் ளார்.

தற்பொழுது ஆடைக்கைத் தொழில்த்துறையின் வருமா னம் சுமார் 25% அளவில் வீழ்ச்சி அடைந்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். இதன் காரணமாக முதலீட் டாளர்கள் வேறு நாடுகள் நோக்கி நகரத் தொடங்கியுள்ள தாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

எதிர்வரும் ஆண்டின் முதல் மூன்று மாத காலப்பகு தியில் பிரதான ஆடைக் கைத் தொழிற்சாலைகளில் 20 வீத மானவை மூடப்படக்கூடிய அபாயம் நிலவி வருவதாக அவர் தெரிவித்துள்ளார். (நி-5-6)

# மாவட்ட நீதிபதிகள், நீதிவான்கள் 54 பேருக்கு இடமாற்றம்

(கொழும்பு)

நாடளாவிய ரீதியில் மாவட்ட நீதிமன்றங்கள் மற்றும் நீதிவான் நீதிமன்றங்களில் கடமையாற்றிய 54 மாவட்ட நீதிபதிகள் மற்றும் நீதிவான்கள் எதிர்வரும் 2024 ஆம் ஆண்டுக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளதாக நீதிச்சேவை ஆணைக்குழுவின் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இடமாற்றம் செய்யப்பட்ட நீதிபதிகள் ஜனவரி முதலாம் திகதி முதல் தங்களது புதிய பணியிடங்களில் பணியைத் தொடங்குவார்கள் என்று நீதிச்சேவை ஆணைக்குழுவின் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (நி-5-6)

# தரப்பரிசோதனையில் அதிக மருந்துகள் தோல்வி

(கொழும்பு)

அதிக எண்ணிக்கையான மருந்துகள் தரப்பரிசோதனையில் தோல்வியடைந்த ஆண்டாக 2023 பதிவு செய்யப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சின் மருந்து விநியோகப் பிரிவு தெரிவித்துள்ளது.

அதன்படி, இந்த ஆண்டில் (2023) இதுவரை மொத்தம் 115 மருந்துகள் தரப்பரிசோதனையில் தோல்வியடைந்துள்ளது.

மேலும் இந்தத் தரப்பரிசோதனையில் தோல்வியடைந்த மருந்துகளில் சுமார் 58 மருந்துகள் இந்தியாவிலும் 45 மருந்துகள் உள்நாட்டிலும் தயாரிக்கப்பட்டுள்ளன. ஏனையவை சீனா, பாகிஸ்தான், ஜப்பான் மற்றும் பங்களாதேஷ் போன்ற நாடுகளில் இருந்து கொண்டு வரப்பட்டவை எனவும் மருந்து விநியோகப்பிரிவு தெரிவித்துள்ளது. (நி-5-6)


## பெறுகை அறிவித்தல்
## கரைச்சி பிரதேச சபை, கிளிநொச்சி
## மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நன்கொடை வேலைத்திட்டம் (PSDG – 2023)

1. தலைவர், உள்ளூராட்சிமன்ற பெறுகைக்குழு, கரைச்சி பிரதேசசபை, கிளிநொச்சி தகுதி வாய்ந்த வழங்குநர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட பொருட்களை கொள்வனவு செய்வதற்கான விலைக் கேள்விகளைக் கோருகின்றார்.
2. தேசிய போட்டி விலைக் கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது.
3. கேள்வி பெறத் தகுதியுடையவராவதற்கு வெற்றி பெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக்கொள்ளப்படாதவராகவும் பின்வரும் தேவைப்பாடுகளையுடையவராகவும் இருத்தல் வேண்டும்.
4. அக்கறை கொண்டுள்ள தகைமையுடைய விலைக் கேள்வியாளர்கள் கரைச்சிபிரதேச சபை, கிளிநொச்சி (தொலைபேசி 021-228-4400) இல் இருந்து மேலதிக தகவல்களை அலுவலக நாட்களில் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் அம் முகவரியில் **24.11.2023** ஆம் திகதியிலிருந்து **07.12.2023** ஆம் திகதி வரை மு.ப 9.00 மணியிலிருந்து பிற்பகல் 15.00 மணிவரை அலுவலக நாட்களில் விலைக் கேள்வி ஆவணங்களைப் பரிசீலனை செய்யலாம்.
5. அக்கறை கொண்டுள்ள விலைக்கேள்வியாளர் ஆங்கில மொழியிலான விலைக் கேள்வி ஆவணங்களின் பூரணமான தொகுதி ஒன்றை தலைவர், கரைச்சிபிரதேசசபை, கிளிநொச்சி என்னும் முகவரியில் **24.11.2023** ஆம் திகதியிலிருந்து **07.12.2023** ஆம் திகதி வரை காலை 9.00 மணியிலிருந்து பிற்பகல் 15.00 மணி வரையும், மீளளிக்கப்படாத கட்டணமாக ஒவ்வொரு கேள்வி ஆவணத்திற்கும் ரூபா 2000.00 (வரி நீங்கலாக) பணமாகச் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம்.
6. விலைக்கேள்விகள் இரு பிரதிகளில் தயாரித்து தலைவர், உள்ளூராட்சிமன்ற பெறுகைக்குழு, கரைச்சி பிரதேசசபை, கிளிநொச்சி எனும் முகவரிக்கு **08.12.2023** ஆம் திகதி பிற்பகல் 14.00 மணிக்கு முன்பதாக கிடைக்கக்கூடியதாக பதிவுத்தபாலில் அனுப்பி வைக்கப்படல் வேண்டும். அல்லது அலுவலகத்தில் வைக்கப்பட்டிருக்கும் கேள்விப் பெட்டியில் இடப்படல் வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே **(08.12.2023 பி.ப 14.00)** வருகை தரும் கேள்விதாரர் அல்லது அவரால் எழுத்து மூலம் அதிகாரம் வழங்கப்பட்ட பிரதிநிதி முன்னிலையில் திறக்கப்படும்.
7. சமர்ப்பிக்கப்பட்ட கேள்விகளை நிராகரிக்கவோ அல்லது மீள்கேள்வி கோரவோ பெறுகைக்குழுத் தலைவருக்கு அதிகாரம் உண்டு.
8. கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டவாறான கேள்விப் பிணைப் பொறுப்பு மத்திய வங்கியால் அங்கீகரிக்கப்பட்ட வங்கியிடம் இருந்து பெற்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

| கேள்வி அடையாள இலக்கம் | வேலை விபரம் | வீதி விளக்குகளின் எண்ணிக்கை | வேண்டப்படும் கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|
| | | | பிணைவைப்பு (ரூபா) | செல்லுபடியாகும் காலம் |
| **NP/PSDG/KPS/ Streetlamp/2023** | Supplying of 30W LED Sreet Lights at Karachchi Pradeshiya Sabha | 60 Nos ±10 % | 6,500.00 | 23.02.2024 |

**பத்மநாதன் பத்மகரன்,**
**தலைவர்,**
**உள்ளூராட்சிமன்ற பெறுகைக்குழு**
**கரைச்சி பிரதேச சபை, கிளிநொச்சி.**

(C-7707)


# இராசிபலன்

**24.11.2023**
**கார்த்திகை 08, வெள்ளிக்கிழமை**
**துவாதசி முன்னிரவு 6.52 மணிவரை**

**ரேவதி பிற்பகல் 4.18 மணிவரை**
**சுபநேரம் -6.11-7.41 மணிவரை**
**இராகுகாலம்-10.41-12.11 மணிவரை**

**சந்திராஷ்டமம்-**
**பூரம், உத்தரம்.**

**வளவன்**

**மேஷம்**
வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், திடீர் பயணங்கள் ஏற்படும் வாய்ப்புண்டு, சுபகாரியச் செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள்.

**ரிஷபம்**
இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், குடும்ப மகிழ்ச்சி அதிகரிக்கும், காரிய அனுகூலமுண்டு

**மிதுனம்**
பெரிய மனிதர்களின் தொடர்புகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, மனநிறைவு கூடும் நாள், மறக்க முடியாத சம்பவங்கள் இடம்பெறலாம், காரிய அனுகூலமுண்டு.

**கடகம்**
விரதம் ,வழிபாடுகளில் நம்பிக்கை வைப்பீர்கள், பிற இனத்தவரால் பெருமைகள் வந்து சேரலாம், தித்திக்கும் பயணங்கள் இடம்பெறலாம், புதிய முயற்சிகளில் ஆர்வம் கூடும்.

**சிம்மம்**
தொழில் ரீதியாக சில குழப்பங்கள் தோன்றி மறையும், சிந்தித்து செயற்பட வேண்டிய நாள், ஆரோக்கியத்தில் அக்கறை காட்ட வேண்டிய நாள்.

**கன்னி**
கேளிக்கை கொண்டாட்டங்களில் நாட்டம் காட்டுவீர்கள், குடும்பத் தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், காரிய அனுகூலமுண்டு.

**துலாம்**
நீண்ட நாளைய பிணக்குகளில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், செய்தொழிலில் அதிக ஆர்வம் காட்டுவீர்கள், பொதுவாழ்வில் கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம்.

**விருச்சிகம்**
புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், காலைப் பொழுதே கலகலப்பான செய்திகள் வந்து சேரலாம், பூர்வீகச் சொத்து சம்பந்தப்பட்ட வகையில் நன்மையுண்டு.

**தனுசு**
வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், தொலைபேசி வழியில் சுபசெய்திகள் வந்து சேரலாம், நண்பர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும் வாய்ப்புண்டு.

**மகரம்**
தொழில் ரீதியாக ஏட்டிக்குப் போட்டியாக இருந்தவர்கள் மனம் மாறுவர், உற்சாகத்தோடு பணிபுரிவீர்கள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**கும்பம்**
பிரியமான சிலரின் சந்திப்பு இடம்பெறலாம், சுபகாரியப் பேச்சுக்களில் முன்னேற்றம் காணும் நாள், வழிபாட்டுச்சிந்தனை மேலோங்கும் நாள்.

**மீனம்**
வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், மற்றவர்கள் வாங்கிய பொருட்களைப் பார்த்து நீங்களும் வாங்க முற்படுவீர்கள், கௌரவம் மிக்கவர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.

**விடாமுயற்சி தோல்வியை வெற்றியாக மாற்றுகிறது.**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மாவீரர் நினைவேந்தல் கொடிகள் இனந்தெரியாத நபர்களால் அறுப்பு



(சாவகச்சேரி)

கொடிகாமம்- பருத்தித்துறை வீதியில் இராணுவ முகாம் முன்பாக அமைந்துள்ள மாவீரர் நினைவேந்தல் இடத்தில் கட்டப்பட்டிருந்த மாவீரர் நினைவேந்தல் கொடிகள் நேற்றுமுன்தினம் புதன்கிழமை இரவு இனந்தெரியாத நபர்களால் அறுத்து எடுத்துச் செல்லப்பட்டிருப்பதாக கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் சாவகச்சேரிப் பிரதேசசபையின் முன்னாள் உப தவிசாளரான- ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சேர்ந்த செ.மயூரன் முறைப்பாடு பதிவு செய்துள்ளார்.

முன்னாள் உப தவிசாளர் மயூரன் தலைமையிலான குழுவினர் நினைவேந்தல் இடத்தில் சிரமதானம் மேற்கொண்டு -நினைவுக் கொடிகளை கட்டிவிட்டு சென்றிருந்த நிலையில் மேற்படி கொடிகள் அனைத்தும் இனந்தெரியாத நபர்களால் அறுத்து எடுத்துச் செல்லப்பட்டுள்ளது. (நி-5-6-30-33)

# பழுதடைந்துள்ள சமிக்ஞை விளக்குகளை சீர்செய்யுங்கள்

## பயணிகள் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

சமிக்ஞை விளக்குகள் தொழில்நுட்ப கோளாறுகள் காரணமாக பழுதடைந்து இருப்பதால் வீதியை கடந்து செல்லும் பயணிகள் அச்சத்தில் பயணிக்கின்றனர்.

யாழ்ப்பாணம் கோப்பாய் சந்தியில் பொருத்தப்பட்டுள்ள சமிக்ஞை விளக்குகள் தொழில்நுட்ப கோளாறுகள் காரணமாக சுமார் இரண்டு வாரங்களாக பழுதடைந்த நிலையில் உள்ளது.

இதனால் வாகனச் சாரதிகள் சமிக்ஞை விளக்குகள் செயற்படுகின்றனவா இல்லையா என்ற சந்தேகத்தில் வீதியை கடப்பதனால் விபத்துக்கள் ஏற்படக்கூடிய ஏது நிலைகள் காணப்படுகின்றன.

எனவே இது தொடர்பில் உரிய அதிகாரிகள் கவனம் செலுத்தி வீதிச்சமிக்ஞை விளக்கினை சீர்செய்து தருமாறு அவ்வீதியால் பயணிக்கும் மக்கள் தெரிவித்துள்ளனர். (நி-6-33)

# நம்நாட்டுப்பாடல் போட்டி

## புனித பத்திரிசியார் கல்லூரி முதலிடம்



(யாழ்ப்பாணம்)

தேசியமட்ட கர்நாடக சங்கீதப் போட்டியில் நம்நாட்டுப் பாடல் இசையில் 1 ஆம் இடத்தை சென்பற்றிக்ஸ் கல்லூரி மாணவர்கள் பெற்றுள்ளனர்.

அகில இலங்கை தேசிய மட்ட கர்நாடக சங்கீதப் போட்டி அண்மையில் அனுராதபுரம் சுவர்ணபாலி மகளிர் கல்லூரியில் நடைபெற்றது. அதில் நம் நாட்டுப் பாடலில் 1 ஆம் இடத்தையும் திரையிசைப் பாடலில் 2 ஆம் இடத்தை சென்பற்றிக்ஸ் கல்லூரி மாணவர்கள் பெற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கது.(நி-5-6)

# மோசடியில் ஈடுபட்ட இருவர் கைது

(யாழ்ப்பாணம்)

யாழில் காணி மோசடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் இரண்டு பெண்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நாவற்குழி பகுதியில் உள்ள காணி ஒன்றினை வெளிப்படுத்தல் உறுதி மூலம் பெயர் மாற்றம் செய்து மோசடியில் ஈடுபட்ட குற்றத்தில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட இரு பெண்களையும் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (நி-5-6-33)

# மோ.சைக்கிளுக்கு தீவைத்து எரிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் பொலிஸ் உத்தியோகஸ்தர் ஒருவரின் மோட்டார் சைக்கிள் ஒன்று தீயிட்டு கொளுத்தப்பட்டுள்ளது.

மருதங்கேணி பகுதிக்கு கடமை நிமித்தம் தனது மோட்டார் சைக்கிளில் சென்று, மோட்டார் சைக்கிளை வீதியில் நிறுத்தி விட்டு, வீடொன்றில் விசாரணை நடவடிக்கையை மேற்கொண்டபோது, வீதியில் நின்ற மோட்டார் சைக்கிளுக்கு தீ வைக்கப்பட்டுள்ளது.

தீ வைத்தவர்கள் தப்பி சென்ற நிலையில் சம்பவம் தொடர்பில் மருதங்கேணி பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (நி-5-6-33)



தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் கார்த்திகை வாச மலர்க் கண்காட்சி நல்லூர் சங்கிலியன் பூங்காவில் நேற்றுமுன்தினம் திறந்து வைக்கப்பட்டது.

(படம்: சிவசாந்தன்)

# கரவெட்டியில் திடீரென தீப்பற்றி எரிந்த ஹயஸ் வாகனம்



(கரணவாய்)

கரவெட்டி பகுதியில் ஹயஸ் வாகனம் தீப்பற்றி எரிந்த சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

குறித்தசம்பவம் தொடர்பில் தெரியவருகையில், ஹயஸ் வாகனத்தில் வெளியே சென்றுவிட்டு திரும்பி வந்து வீட்டின் வளவுக்குள் நிறுத்தியுள்ளார்.

திடீரென தீப்பற்றி வாகனம் எரிந்து கொண்டு இருந்ததைக் கண்ட உரிமையாளர் வாகனத்தில் தீப்பரவுவதை கட்டுப்படுத்துவதற்கு முயன்றவேளை கையில் காயங்கள் ஏற்பட்டது. இதனையடுத்து குறித்த நபர் பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டுள்ளார். மேலும் குறித்த வாகனம் முற்றுமுழுதாக தீயில் எரிந்துள்ளது. (நி-5-6-60)

# இலங்கை அரசாங்கத்தின் அடக்குமுறை தொடர்பில் ஐரோப்பிய ஒன்றியம் அச்சம்

(கொழும்பு)

சிவில் சமூக செயற்பாட்டாளர்களுக்கு எதிராக பலத்தைப் பயன்படுத்துவதை அவதானிக்கும் போது, இலங்கை அரசாங்கத்தின் அடக்குமுறை நடவடிக்கை தொடர்பில் அச்சம் ஏற்பட்டுள்ளதாக ஐரோப்பிய ஒன்றியம் தெரிவித்துள்ளது.

இந்த சவாலான சூழலில் அரசாங்கம் நிதானத்தைக் கடைப்பிடிப்பதும், ஒன்று கூடும் சுதந்திரம், கருத்துச் சுதந்திரம் மற்றும் அச்சுறுத்தல் இல்லாத எதிர்ப்பு உரிமை ஆகியவற்றை தொடர்ந்து உறுதிப்படுத்த வேண்டியது மிகவும் முக்கியமானதாகும் எனஅந்த ஒன்றியம் சுட்டிக்காட்டியுள்ளது.


இலங்கையின்சிவில்சமூகம், நாட்டின் ஒரு பகுதியாக இருந்தால், மறுசீரமைப்பு செயல்முறை மிகவும் நிலையானதாகவும் வலுவானதாகவும் அமையும்.

ஐரோப்பிய பாராளுமன்றம் மற்றும் சபைக்கு அளித்த கூட்டு அறிக்கையில் இந்தக் கருத்துக்களை, ஐரோப்பிய ஒன்றியம் குறிப்பிட்டுள்ளது.

செப்டெம்பர் 24 ஆம் முதல் ஒக்டோபர் மாதம் 5 ஆம் திகதி வரை, இலங்கையில் கண்காணிப்பு பணியை நடத்திய பின்னரே ஐரோப்பிய ஒன்றியம் இந்த விடயங்களை தெரிவித்துள்ளது. (நி-5-6)

# சட்டவிரோதமாக மாடுகளை கடத்திய நபரொருவர் கைது

## நான்கு மாடுகள் மீட்பு



(யாழ்ப்பாணம்)

சட்டவிரோதமான முறையில் மாடுகளை வாகனத்தில் கடத்திச் சென்ற நபர் ஒருவர் நேற்றுமுன்தினம் புதன்கிழமை கைது செய்யப்பட்டுள்ளதுடன், கடத்தலுக்கு பயன்படுத்தப்பட்ட வாகனம் மற்றும் கடத்திச் செல்லப்பட்ட நான்கு மாடுகள் என்பன மீட்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் ஊர்காவற்துறை பகுதியில் இருந்து யாழ். நகரப்பகுதியை நோக்கி பட்டாரக வாகனத்தில் மாடுகளைக் கடத்தி சென்றவேளை மண்டைதீவு சந்தியில் உள்ள பொலிஸ் காவலரணில், பொலிஸார் வாகனத்தை மறித்து சோதனையிட்ட வேளை மாடுகளை கடத்தி செல்லப்படுவதனை கண்டறிந்துள்ளனர்.

அதனை அடுத்து மாடுகளை கடத்திய குற்றத்தில் வாகன சாரதியை கைது செய்த பொலிஸார் வாகனத்தையும், மாடுகளையும் கைப்பற்றியதையடுத்து சந்தேகநபரை ஊர்காவற்துறை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (நி-5-6-33)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நோய் எதிர்ப்பு மருந்துகளை தேவையில்லாமல் வழங்க வேண்டாம்

## பெற்றோர்களிடம் மருத்துவர் கோரிக்கை

**(கொழும்பு)**

**வைத்தியர்களின் ஆலோசனையின்றி நோய் எதிர்ப்பு மருந்துகளை பயன்படுத்துவதால், உயிர்வாழ்வுக்குத் தேவையான பக்டீரியாக்கள் மரணிக்கலாம். இதன் காரணமாக மனிதன் 50 ஆண்டுகளுக்குள் மரணிக்கும் சாத்தியம் காணப்படுவதாகவும் குழந்தைகள் நல மருத்துவர் தீபால் பெரேரா தெரிவித்துள்ளார்.**



"உலக அண்டியயாடிக் விழிப்புணர்வு வாரம்" குறித்து கருத்துத் தெரிவித்த போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

நோயெதிர்ப்பு மருந்துகள் பக்டீரியாக்களை வலுவிழக்கச் செய்யும் என்றும், அதிகபடியான நன்மை பயக்கும் பக்டீரியாக்களும் இதனால் கொல்லப்படுகின்றன என்றும் மருத்துவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எனவே மிகவும் அவசியமான சூழ்நிலைகளைத் தவிர, தேவையில்லாமல் குழந்தைகளுக்கு நோய் எதிர்ப்பு மருந்துகளை வழங்க வேண்டாம் என்று அவர் பெற்றோரிடம் கோரிக்கை விடுத்துள்ளார்


ஒருவரின் வயது மற்றும் எடை உட்பட பல காரணிகளை கருத்தில் கொண்டே நோய் எதிர்ப்பு மருந்துகளை பயன்படுத்த வேண்டும்.

வைரஸ் காய்ச்சல் மற்றும் வயிற்றுப்போக்குக்கு நோய் எதிர்ப்பு மருந்துகள் தேவையில்லை.

இருமல், சளி மற்றும் சிறு காயங்களுக்கு மருத்துவரின் பரிந்துரைப்படி நோய் எதிர்ப்பு மருந்துகளை பயன்படுத்த முடியும் என குழந்தைகள் நல மருத்துவர் தீபால் பெரேரா தெரிவித்துள்ளார். (நி-5-6)

# இந்தியாவின் பாதுகாப்பிற்கு இலங்கை பங்கம் விளைவிக்காது

## ரணில் உறுதி



(கொழும்பு)

சீனாவுடனான இலங்கையின் உறவு இந்தியாவிற்கும் சீனாவிற்கும் இடையிலான உறவுகளில் தங்கியிருக்கவில்லை என தெரிவித்துள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்தியாவின் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் ஏற்படுத்தும் விதத்தில் இலங்கை செயற்படாது என தெரிவித்துள்ளார்

பெர்ஸ்ட்போஸ்டின் பல்கி சர்மாவிற்கான பேட்டியில் ஜனாதிபதி இதனை தெரிவித்துள்ளார். இந்தியா தனது சொந்த பாதுகாப்பு குறித்து கவலையடைந்துள்ளது இலங்கை இந்தியாவின் பாதுகாப்பிற்கு பாதிப்பை ஏற்படுத்தும் விதத்தில் செயற்படாது என ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

இந்திய பிரதமர் நரேந்திர மோடியை கடந்த வருடம் சந்தித்தமை குறித்து கருத்து தெரிவித்துள்ள ஜனாதிபதி அவர் முதலமைச்சராகயிருந்த காலம் முதல் எனக்கு அவரை தெரியும் எங்கள் நட்பு ஒருபடி முன்னோக்கியது.

கடந்த வருடம் இலங்கை பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டவேளை இந்தியா வழங்கிய உதவியை சுட்டிக்காட்டியுள்ள ரணில் விக்கிரமசிங்க கடந்த வருடம் இந்தியா தனது கடனை நீடித்தது எனவும் தெரிவித்துள்ளார். (நி-5-6)

# பாராளுமன்ற சம்பவத்திற்கு வருத்தம் தெரிவித்து கடிதம்

(கொழும்பு)

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவுக்கு இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்த கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார்.

இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்த இரண்டு வாரங்களுக்கு பாராளுமன்ற அமர்வுகளில் பங்குபற்ற தடை விதிக்கப்பட்டமை தொடர்பிலேயே கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார்.

பாராளுமன்றத்தில் அண்மையில் இடம்பெற்ற சம்பவம் தொடர்பில் தாம் வருத்தம் தெரிவிப்பதாக குறித்த கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாறானதொரு சம்பவம் நடந்திருக்க கூடாது என்றும் அவர் அனுப்பிய கடிதத்தில் தெரிவித்துள்ளார். (நி-5-6)

# வான்பாயும் மலையக நீர்த்தேக்கங்கள்

(கண்டி)

மலையகத்தில் தொடர்ச்சியாக பெய்து வரும் கனமழை காரணமாக 'காசல்ரீ' நீர்தேக்கம் முழுமையாக நிரம்பிக் காணப்படுவதோடு, மேலதிக நீர் நேற்று முன்தினம் இரவு முதல் வான் மேவிப் பாய்ந்து வருவதாகத் தெரிவிக்கப் பட்டுள்ளது.

இதே வேளை நோர்ட்டன்பிரிட்ஜ் பகுதியில் அமைந்துள்ள விமல சுரேந்திர நீர்த்தேக்கப் பகுதியில் கடுமை யான மழை பெய்து வருவதானால் அந்த நீர்த்தேக் கத்தில் ஆறு கதவுகள் ஊடாக நீர் வான்பாய்கின்றன.

அத்துடன் கெனியன், லக்ஸபான, நவ லக்ஸபான, பொல்பிட்டிய, மவுஸ்ஸாக்கலை, மேல் கொத்மலை ஆகிய நீர் தேக்கங்களின் நீர்மட்டம் அதிகரித்துள்ளதுடன், வான் கதவுகளும் திறக்கப்பட வாய்ப்புள்ளதாக மின்சாரசபை அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-5-6)

# குறைவடைந்துள்ள உரத்தின் விலை

## தேசிய உரச் செயலகம் தெரிவிப்பு

(கொழும்பு)

சந்தையில் உரத்தின் விலை குறைவடைந்துள்ளதாக தேசிய உரச் செயலகம் தெரிவித்துள்ளது.

தேவையானளவு உரம், நாட்டில் காணப்படுவதாகவும் தேசிய உரச் செயலகத்தின் பணிப்பாளர் சந்தன லொக்கு ஹேவா தெரிவித்துள்ளார். [illegible] 10,000 மெற்றிக்தொன் யூரியா உரம், டிசெம்பர் மாதத்திற்குள் நாட்டிற்கு கிடைக்கவுள்ளதாகவும் தற்போது 60,000 மெற்றிக் தொன் உரம் சந்தைக்கு விநியோகிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அரசாங்கத்திடம் 15,000 மெற்றிக் தொன் [illegible] யூரியா உரம் கையிருப்பிலுள்ளது.

தனியார் துறையினரிடம் 60,000 மெற்றிக் தொன் யூரியா உரம் காணப்படுகிறது.

இதனிடையே, 2000 மெற்றிக் தொன் உரம் சந்தைக்கு விநியோகிக்கப் பட்டுள்ளதாக அவர் தெரி[illegible] (நி-5-6)

அன்பு வாசகர்களே!
உங்கள் வலம்புரி
இப்போது...
இல. 191, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
எனும் முகவரியில் இயங்குகிறது.
(யாழ். பிறவுண் வீதியில் அரசடிச் சந்திக்கும் கலட்டி சந்திக்கும் இடையில்)
மேலதிக தொடர்புகளுக்கு
076 097 3121
021 222 3378

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரதம்

# கனேடியர்களுக்கு மீண்டும் ஈ.விசா வழங்கும் இந்தியா

(டில்லி)
கனேடிய பிரஜைகளு க்கு மீண்டும் ஈ.விசா வழ ங்கப்படும் என இந்தியா அறிவித்துள்ளது.

கடந்த சில மாதங் களாக இரு நாடுகளுக்கும் இடையில் கடுமையான ராஜதந்திர முரண்பாட்டு நிலை ஏற்பட்டிருந்தது.

சீக்கிய மதத்தலைவர் ஹார்தீப் சிங் நிஜார் படு கொலை சம்பவம் காரணமாக இரு தரப்பு உற வுகளில் விரிசல் நிலைமை ஏற்பட்டது.

இதன் எதிரொலியாக இரு நாடுகளும் ராஜதந்திரி களை திருப்பி பெற்றுக் கொண்டதுடன், விசா சேவைகளும் பாதிக்கப் பட்டது.

இந் நிலையில் கடந்த இரண்டு மாதங்களாக கனேடியர்களுக்கு ஈ.விசா வழங்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

ஈ.விசா வழங்கும் நடை முறை மீள ஆரம்பிக்கப் பட்டுள்ளதாக இந்திய அர சாங்கம் அதிகாரபூர்வமாக அறிவித்துள்ளது. (நி-5-6)

# நயாகரா அருகே வெடித்த கார்

## இருவர் பலி



(வோஸிங்டன்)
அமெரிக்காவிற்கும் கனடாவிற்கும் இடையே நயாகரா நீர்வீழ்ச்சிக்கு அருகில் உள்ள ரெயின்போ பாலத்தில் கார் ஒன்று வெடி த்ததில் இருவர் உயிரிழ ந்துள்ளனர்.

ரெயின்போ பாலம் ஒன் டாரியோவை நியூயோர்க் குடன் இணைக்கும் 4 எல் லைக் கடப்புகளில் ஒன்றாகும்.

இந்நிலையில், நயாகரா நீர்வீழ்ச்சிக்கு அருகில் உள்ள அமெரிக்கா-கனடா எல்லை சோதனைச் சாவடியில் கார் ஒன்று வந்து சென்று கொண் டிருந்த போது கார் திடீரென வெடித்ததில் 2 பேர் பலியாகியுள்ளனர் என அதிகாரிகள் தெரிவித்துள் ளனர். (நி-5-6)

# கனடாவில் 5 மில்லியன் கோழிகள் உயிரிழப்பு

(ஒட்டாவா)
கனடாவின் பிரிட்டிஸ் கொலம்பிய மாகாணத்தில் சுமார் ஐந்து மில்லியன் கோழிகள் உயிரிழந்துள் ளதாகத் தெரிவிக்கப்படு கின்றது.

பறவைக்காய்ச்சல் கார ணமாக இவ்வாறு கோழி கள் உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதனால் மாகாணம் முழுவதிலும் பெரும் பாதிப் புக்கள் பதிவாகியுள் ளன.

பண்ணை உரிமை யாளர்கள் அசௌகரியங் களை எதிர்நோக்கி வரு வதாகவும் பறவைக் காய் ச்சல் தொற்றை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுத்து வருவ தாகவும் தெரிவிக்கப்படு கின்றது.

மாகாணத்தின் பறவைப் பண்ணைகளுக்கு சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டு ள்ளமை குறிப்பிடத்தக் கது. (நி-5-6)

# துருப்புகளை குவிக்கும்

# ஒப்பந்தத்திலிருந்து விலகிய



## கொரிய தீபகற்பத்தில்

(சியோல்)
கூட்டு இராணுவ
கொரியா விலகிய
எல்லைக்கு அதி
உபகரணங்களை
வித்ததையடுத்து

இராணுவ உளவு செயற் கைக்கோளான மல்லி கியோங்-1ஐ வெற்றிகரமாக சுற்றுப்பாதையில் செலுத் தியதாக வடகொரியா கூறி யதை அடுத்து, நேற்று முன் தினம் (புதன்கிழமை) ஒப்ப ந்தத்தின் சில பகுதிகளிலிரு ந்து தென்கொரியா விலகியது.


இதனைத்தொடர்ந்து, வட-தெற்கு இராணுவ ஒப்பந்தத் தின்படி நிறுத்தப்பட்ட அனை த்து இராணுவ நடவடிக்கை களையும் நாங்கள் உட னடியாக மீட்டெடுப்போம் அதா வது, தரை, கடல் மற்றும் வான் உட்பட அனைத்து துறைகளிலும் இராணுவ பதற்றம் மற்றும் மோதலைத் தடுக்க எடுக்கப்பட்ட இராணுவ நடவடிக்கைகளை நாங்கள் திரும்பப் பெறுவோம். மேலும் இராணுவ எல்லைக்கோடு வழியாக பிராந்தியத்தில் மிகவும் சக்திவாய்ந்த ஆயு தப்படைகள் மற்றும் புதிய வகை இராணுவ தளவாட ங்களை நிலைநிறுத்துவோம்' என அதிகாரபூர்வ கொரிய மத்திய செய்தி நிறுவனம் கே.சி.என்.ஏ தனது அறிக் கையில் தெரிவித்துள்ளது.

மேலும் தென் கொரியா 'தற்போதைய சூழ்நிலையை கட்டுப்படுத்த முடியாத கட்ட த்திற்கு தள்ளியுள்ள பொறுப்

பு
அ
ஆ
வி
எ
உ
ப
தே
சி
இ
ப்ப
ய
ப்ப

# ஏவுகணை பரிசோதனை வெற்றி

(டில்லி)
இந்தியக் கடற் படை க்குச் சொந்தமான ஐ.என்.எஸ். இம்பால் போர்க்கப்பலில் இருந்து பிரமோஸ் ஏவு கணை செலுத்தும் பரி சோதனை வெற்றிகர மாக நடத்தப்பட்டதாக இந்திய கடற்படையின் மேற்கு பகுதி ஆணை யம் அதிகார பூர்வமாக அறிவித்துள்ளது.



மணிக்கு சுமார் 56 கிலோமீற்றர் தூரம் பய ணிக்கக் கூடிய இந்தக் கப்பல், 164 மீற்றர் நீள மும் 7400 தொன்னும் கொண்டதுடன் கப்பலில் இருந்து தரையிலிருந்து தரைக்கு செல்லும் ஏவு கணைகளை செலுத்த முடியும்.

இந்தக் கப்பலை இந்த வருட இறுதியில் அல்லது 2024 ஆம் ஆண்டு தொடக்கத்தில் நாட்டின் பாதுகாப்பிற்கு அர்ப்பணிக்க இந்திய கப்பற்படை திட்டமிட ப்பட்டு செயற்பட்டு வரு கிறது.

இந்த நிலையில் கப்ப லில் இருந்து பிரமோஸ் ஏவுகணை செலுத்தும் பரிசோதனை நேற்று முன்தினம் வெற்றி கர மாக நடத்தப்பட்டுள்ளது.

இந்திய கடற்படைக்கு சொந்தமானது ஐ.என். எஸ். இம்பால் போர் கப்பல் உலகின் நவீன போர் கப்பல்களில் ஒன் றாக இருக்கிறது. (நி-5-6)

# ரஷ்யாவுடன
# மூடுவதற்



(எல்சிங்கி)
புலம்பெயர்ந்தோரின் வருகை அதிகரித்த பி னர், ரஷ்யாவுடனா அதன் எல்லைக் கட களில் ஒன்றைத் தவி மற்ற அனைத்தையு மூடுவதாக பின்லாந் அறிவித்துள்ளது.

வெள்ளிக் கிழமை இறுதிவரை, ரஷ்யாவ

உ
சீன

எ
ெ
ெச

# சீனாவில் கண்டறியப்படாத புதிய வகையிலான நிமோனியா

(பீஜிங்)
சீனாவில் கடந்த சில நாட் களாக அறியப்படாத புதிய நிமோனியா நோய் பரவி வருகிறது.

பீஜிங்,லியோனிங் மற்றும் பல நகரங்களில் உள்ள குழந்தைகள் மருத்துவ மனைகள் இந்த நோயால் பாதிக்கப்பட்ட குழந்தைகளால் நிரம்பியுள்ளன.

வட சீனாவில் பரவி வரும் நோய் பற்றிய அனைத்து தக வல்களையும் வழங்குமாறு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு

## ...தும் வடகொரியா!
## ...கிய தென்கொரியா!
## ...தில் தொடரும் பதற்றம்

**ல்)**

**இராணுவ உடன்படிக்கையில் இருந்து தென் ... விலகியதில் இருந்து தென்கொரியாவின் ...க்கு அதிக துருப்புக்கள் மற்றும் இராணுவ ...ங்களை நகர்த்துவதாக வடகொரியா அறி ...யடுத்து அங்கு பதற்றம் நிலவியுள்ளது.**

...கோடு ...த்தில் ...ஆயு ...புதிய ...ாவாட ...வோம்' ...காரிய ...வனம் ...அறிக் ...து.

...ாரியா ...லையை ...கட்ட ...பாறுப் பற்ற மற்றும் தீவிரமான அரசியல் மற்றும் இராணுவ ஆத்திரமூட்டல்களுக்கு அதிக விலை கொடுக்க வேண்டும்' என்றும் வட கொரியா கூறியது.


இதனிடையே, சியோலில் உள்ள எவ்வா வொமண்ஸ் பல்கலைக்கழகத்தின் சர்வ தேச ஆய்வுகளின் பேரா சிரியரான லீஃப்-எரிக் ஈஸ்லி, இருதரப்பு ஒப்பந்தம் கைவிட ப்பட்டதன் விளைவாக அபா யங்கள் அதிகரிக்க வாய் ப்புள்ளது என விபரித்துள்ளார்.

தீபகற்பத்தில் பதற்றத்தை குறைக்கும் மற்றும் இரு நாடுகளுக்கு இடையே நம் பிக்கையை வளர்க்கும் முயற்சியின் ஒரு பகுதியாக, வடகொரிய தலைவர் கிம் ஜாங் உன் மற்றும் தென் கொரிய முன்னாள் ஜனாதிபதி மூன் ஜே-இன் இடையே 2018 ஆம் ஆண்டு உச்சி மாநாட்டில் விரிவான இரா ணுவ ஒப்பந்தம் கையெழுத் தானமை குறிப்பிடத்தக் கது. (நி-5-6)

## விமான ஓடுதளத்தை தாண்டி கடலில் இறங்கிய விமானம்

(வோஷிங்டன்)

அமெரிக்காவில் விமா னம் ஒன்று விமான தளத்தில் தரையிறங்க முற்பட்டபோது அது எதிர் பாராத விதமாக ஓடு தள த்தை தாண்டி வேகமாக சென்று, கடல்நீரில் இற ங்கிய சம்பவம் பரபர ப்பை ஏற்படுத்தியுள் ளது.



எனினும் அதிர்ஷ்ட வசமாக இந்த விபத்தில் உயிரிழப்பு எதுவும் ஏற்பட வில்லை. பயணிகள் அனைவரும் காயங்கள் ஏதுமின்றி கடலில் நீந்தி கரை சேர்ந்து உயிர் தப்பி னர்.

மேற்கு அமெரிக்கா வில் உள்ள தீவுகள் நிறைந்த மாநிலம், ஹவாய். இதன் தலை நகரம் ஹோனோ லூலு. இங்குள்ள ஒவாஹு தீவுக்கு அருகே கெனோஹே கடற்கரை பகுதியில் அமெரிக்க இராணுவத்தின் விமான படைக்கு சொந்த மான விமான தளம் ஒன்று உள்ளது.

இந்த தளத்திற்கு வோஷிங்டன் மாநில விட்பி தீவில் இருந்து 9 பயணிக ளுடன் போயிங் போஸி டான் 8-ஏ ரக அமெரிக்க கண்காணிப்பு விமானம் ஒன்று சென்ற போது. கருமேகங்கள் மற்றும் மழையினால் ஓடுதளம் விமானிக்கு தெளிவாக தெரிய வில்லை என்பதால் இந்த விபத்து நிகழ்ந்துள்ள தாகவும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

அந்த விமானத்தில் இருந்து எரிபொருள் உள்ளிட்ட அபாயகரமான பொருட்கள் ஏதும் கடல் நீரில் கலந்து விடாமல் தடுக்கும் விதமாக கடல் நீரில் பலமான தடுப்புகள் அமைக்கப்பட்டு ள்ளன.

அதேவேளை இரா ணுவ உளவு வேலை களுக்கு பயன்படுத்த ப்படும் இந்த விமானம் சுமார் ரூ.2300 கோடி ($275 மில்லியன்) மதி ப்புடையது என கூறப் படுகின்றமை குறிப்பிடத் தக்கது. (நி-5-6)

## ...யாவுடனான எல்லைக் கடப்புக்களை ...டுவதற்கு பின்லாந்து தீர்மானம்



...ங்கி)

...பெயர்ந்தோரின் ...அதிகரித்த பின் ...ஷ்யாவுடனான ...ல்லைக் கடப்பு ...ன்றைத் தவிர ...அனைத்தையும் ...க பின்லாந்து ...ுள்ளது.

...ர் ளிக் கிழமை ...ரை, ரஷ்யாவுட னான அதன் வடக்கு எல் லையான ராஜா-ஜூசெப்பி மட்டுமே திறந்திருக்கும் என்று பின் லாந்து பிரதமர் பெட்டேரி ஓர்போ நேற்று முன்தினம் (புதன் கிழமை) அறிவித்தார்.

நவம்பரில் ரஷ்யா வழி யாக 600 இற்கும் மேற் பட்ட புகலிடக்கோரிக் கையாளர்கள் பின்லாந் துக்குள் நுழைந்துள்ள னர்.

அவர்கள் பெரும் பாலும் ஏமன், ஆப்கானி ஸ்தான், கென்யா, மொரா க்கோ, பாகிஸ்தான், சோமாலியா மற்றும் சிரியா போன்ற நாடு களைச் சேர்ந்தவர்கள் என்று எல்லை அதிகாரி கள் தெரிவித்துள்ளனர்.

பெரும்பாலானவர்கள் 20 வயதிற்குட்பட்ட இளை ஞர்கள். ஆனால் சிலர் குழந்தைகளைக் கொண்ட குடும்பங்கள், எல்லைப் பாதுகாப்புத் தரவுகள் மற்றும் செய்தி நிறுவனங்களின் புகைப் படங்கள் காட்டியது.(நி-5-6)

## காசாவில் போர் நிறுத்தத்தை வரவேற்ற பிரான்ஸ் ஜனாதிபதி

(பாரிஸ்)

காசாவில் போர் நிறு த்த அறிவிப்புக்கு பிரா ன்ஸ் ஜனாதிபதி இம் மானுவேல் மெக்ரோன் வரவேற்பு தெரிவித்து ள்ளார்.



இதுதொடர்பாக பிரா ன்ஸ் ஜனாதிபதி இம்மா னுவேல் மெக்ரோன் எக்ஸ் வலைத்தளத்தில் வெளியிட்டுள்ள செய் தியில்,

காசாவில் பணயக் கைதிகளை விடுவிப்ப தற்கான ஒப்பந்தம் மற்றும் மனிதாபிமான போர் நிறுத்தம் குறித்த அறிவிப்பை வர வேற்கிறேன். அனைத்து பணயக் கைதிகளையும் விடுவிக்க அயராது உழைத்து வருகிறோம்.

காசாவில் உள்ள பொது மக்களுக்கு உத விகள் வழங்க மனி தாபிமான போர் நிறுத்தம் உதவிகரமாக இருக்கும் என பதிவிட்டுள்ளார்.

கடந்த ஒரு மாதத் திற்கும் மேலாக காசா வில் ஹமாஸ் பயங்கர வாதிகளுக்கு எதிராக போர் நடைபெற்று வருகிறது.

இஸ்ரேல் மற்றும் பாலஸ்தீனம் இடையே போர் நிறுத்தம் ஒப்பந்தம் செய்ய அமெரிக்கா உதவி யுடன் கத்தார் மத்தியஸ்த ரராக செயற்பட்டு வந்தது.

இதனால் ஹமாஸ் அமைப்பு தாங்கள் பிடித்து வைத்துள்ள பணயக் கைதிகளில் 50 பேரை விடுதலை செய்ய சம் மதம் தெரிவித்தது.

இதையடுத்து இஸ் ரேல் அமைச்சர் சபை நான்கு நாட்கள் போர் நிறுத்தம் செய்ய ஒப்புதல் வழங்கியது. (நி-5-6)

## ...ாத ...யா

...வரும் ...து தக ...மாறு உலக சுகாதார நிறுவனம் சீனாவிற்கு அறிவித்துள்ளது.


நாட்டில் உள்ள சிறுவர்க ளிடையே இந்த நிலை பொதுவாக காணப்படுவதாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்த நிமோனியா நோய் தொற்று வடசீன குழந்தை களிடையே பரவி வருவதாக வும், அதனை சீன அதிகாரி கள் மூடி மறைப்பதாகவும் தாய்வான் ஊடகங்கள் செய்தி வெளியிட்டிருந்தன.(நி-5-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

தோற்றம்
1943 . 10 . 10



மறைவு
2023 . 11 . 23

## அமரர்.அரியகுட்டி சின்னத்துரை

யாழ்.தாவடி வீதி, சுதுமலை தெற்கு, மானிப்பாயை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அரியகுட்டி சின்னத்துரை அவர்கள் 23.11.2023 நேற்று வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அரியகுட்டி மாணிக்கம் தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான கந்தையா பரமேஸ்வரி தம்பதிகளின் அருமை மருமகனும், செல்வராணியின் அன்புக் கணவரும், சிவாநந்தினி, சிவரூபன் (முகாமையாளர் -கொமர்ஷல் வங்கி) பிரசிந், பிரியங்கன்(லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், ஜறின் சோபியாவின் (கொமர்ஷல் வங்கி) பாசமிகு மாமனாரும் ஷெறில், ஷெபிக்கா, ஷெவின் ஆகியோரின் அன்புப் பேரனும், விஜயன், செல்லத்துரை, தவமணி, காலஞ்சென்ற தங்கச்சியம்மா ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று 24.11.2023 வெள்ளிக்கிழமை காலை 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தாவடி வீதி,
சுதுமலை தெற்கு,
மானிப்பாய்.

(17974)

தகவல்: குடும்பத்தினர்
077 872 7625,
077 250 0617




| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 400 | 300 | 350 | 350 |
| உருளைக்கிழங்கு | 200 | 200 | 200 | 240 |
| பச்சைமிளகாய் | 600 | 500 | 600 | 600 |
| தக்காளி | 400 | 500 | 350 | 500 |
| மரவள்ளிக்கிழங்கு | 100 | 100 | 150 | 120 |
| கோவா | 350 | 350 | 350 | 400 |
| கரட் | 250 | 400 | 380 | 500 |
| பூசணி | 100 | 100 | 100 | 100 |
| புடோல் | 250 | 250 | 200 | 200 |
| வாழைக்காய் | 180 | 180 | 180 | 300 |
| சின்ன வெங்காயம் | 380 | 350 | 450 | 450 |
| பெரிய வெங்காயம் | 300 | 240 | 300 | 350 |
| பாகற்காய் | 550 | 500 | 500 | 600 |
| வெண்டக்காய் | 250 | 250 | 200 | 300 |
| கருணைக் கிழங்கு | 160 | 100 | 120 | 200 |
| பயற்றங்காய் | 600 | 500 | 450 | 500 |
| லீக்ஸ் | 300 | 250 | 250 | 400 |
| பீற்றூட் | 250 | 250 | 200 | 400 |
| கறிமிளகாய் | 600 | 600 | 600 | 600 |
| முருங்கைக்காய் | 550 | 500 | 400 | 800 |
| போஞ்சி | 500 | 500 | 500 | 600 |
| கத்தரிதம்புள்ள | 350 | 250 | 350 | 320 |
| கீரை - 1 பிடி | 150 | 100 | 100 | 200 |
| தேசிக்காய் | 1500 | 1000 | 1200 | 1200 |
| தேங்காய் (ஒன்று) | 100 | 100 | 80 | 70-110 |
| இராசவள்ளி | 450 | 600 | 500 | 500 |
| வெங்காயப்பூ | --- | 800 | --- | --- |
| முள்ளங்கி | 120 | 150 | --- | 300 |
| பொன்னாங்காணி | 80 | 100 | 100 | 60 |
| வல்லாரை | 40 | 35 | 50 | 50 |
| ஈரப்பலா | 150 | 200 | 150 | 200 |

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2973

### அருள்




### கஸ்தூரி




### சதீஸ்

நேத்து எங்க வீட்டு அயன்பாக்ஸ் வேலை செய்யலனு, பக்கத்து வீட்டுல போய் அயன் பாக்ஸ் கேட்டேன். அதுக்கு அவரு இங்கேயே அயன் பண்ணிட்டு போங்கனு சொன்னாரு...
இன்னைக்கு அந்த பக்கத்து வீட்டுக்காரரு.. என்கிட்ட வந்து, வீடு கூட்ட தொடப்பம் கேட்டாரு இங்கையே கூட்டிட்டு போங்கனு சொன்னேன்...
திட்டிட்டு போறான்யா அவன் நான் என்ன தப்பா சொல்லிட்டேன். அவன் சொன்னததான் நானும் சொன்னேன்... 😁😁😁

### கோபினா




### அபிராமி




### சிவர்சன்




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளி. மாவட்டத்தில் 70 குடும்பங்கள் மீள்குடியேறுவதற்கு விண்ணப்பம்



(கண்டாவளை)


கிளிநொச்சி மாவட்டத்தில் தற்போது எழுபது வரையான குடும்பங்கள் தமது சொந்தக் காணிகளில் மீள்குடியேறுவதற்காக விண்ணப்பித்துள்ளனர் என மாவட்ட அரசாங்க அதிபர் ரூபவதி கேதீஸ்வரன் தெரிவித்தார்.

மாவட்டத்தினுடைய மீள் குடியேற்றம் தொடர்பில் நேற்று ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கும் போது கிளிநொச்சி மாவட்டத்தில் கடந்த 2009 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்திற்கு பின்னராக மக்கள் கட்டம் கட்டமாக மீள்குடியேற்றம் செய்யப்பட்டு இதுவரை ஐம்பதாயிரத்து 29 குடும்பங்கள் மீள்குடியேறியுள்ளன.

தற்போது பச்சிலைப்பள்ளி பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட பகுதிகளிலே கண்ணிவெடி அகற்றும் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

குறித்த பிரதேசங்களிலே மீள்குடியேறுவதற்காக இதுவரை 65 வரையான குடும்பங்கள் தங்களுடைய பதிவுகளை மேற்கொண்டு உள்ளார்கள் மேலும் கரைச்சி பிரதேச செயலாளர் பிரிவில் 5 குடும்பங்களும் சொந்தக் காணிகளில் மீள்குடியேறுவதற்காக விண்ணப்பித்துள்ளனர் என மேலும் தெரிவித்துள்ளார். (நி-5-6-315)



மாவீரர் வாரத்தை முன்னிட்டு இன்னுயிர்களை தியாகம் செய்த மாவீரர்களை நினைவுகூரும் வகையில் மாவீரர்களின் பெற்றோர்களை மதிப்பளித்து கௌரவப்படுத்தும் நிகழ்வு நேற்று மன்னார் நகரசபை கலாசார மண்டபத்தில் இடம்பெற்றது.

(படம்:-ஜோசப்நயன்)

# மருதங்கேணி கொலை வழக்கு குற்றம்சாட்டப்பட்ட நபர் விடுதலை

(கண்டாவளை)

கிளிநொச்சி மருதங்கேணி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பகுதியில் கடந்த 2015 ஆம் ஆண்டு ஆவணி மாதம் 27ஆம் திகதியன்று ஒருவர் உயிரிழந்தமை தொடர்பான குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட நபர் குற்றச்சாட்டுகளிலிருந்து நேற்று முன்தினம் விடுவிக்கப்பட்டுள்ளார்.

குறித்த குற்றச்சாட்டு தொடர்பில் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு கிளிநொச்சி நீதிவான் நீதிமன்றத்தில் வழக்கு நடைபெற்று வந்த நிலையில் சட்டமா அதிபர் திணைக்களத்தினால் குறித்த வழக்கானது கிளிநொச்சி மேல் நீதிமன்றத்தில் விளக்கத்திற்கு நேற்று முன்தினம் கிளிநொச்சி மேல் நீதிமன்ற நீதிபதி எ.எம்.எம் சஹாப்தீன் முன்னிலையில் எடுத்துக்கொள்ளப்பட்டது.

முதலாம் சாட்சியான உயிரிழந்தவரின் மனைவி பொலிஸாருக்கு வழங்கிய சாட்சி மற்றும் நீதிமன்றுக்கு வழங்கிய சாட்சியம் முரண்பாடாக மாறுபட்டுக் காணப்பட்டதுடன் சாட்சியங்கள் நிரூபிக்கப்பட்டதன் அடிப்படையில் குறித்த குற்றச்சாட்டில் இருந்து எதிரியை மேல் நீதிமன்றம் விடுதலை செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-5-6-315-316)

# ஏலவிற்பனை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றத்தில் எதிர்வரும் 28.11.2023 ஆம் திகதியன்று காலை 9 மணிக்கு எமது நீதிமன்ற வளாகத்தில் 195 கியூப் மணல், 24 கியூப் ஊத்தை மண், 3 கியூப் கிரவல் என்பன ஏலவிற்பனை நடைபெறவுள்ளது.

ஏலவிற்பனைக்கான மணலினை ஏலவிற்பனை ஆரம்பமாவதற்கு அரை மணித்தியாலயம் முன்பாக பதிவாளரின் அனுமதியுடன் பார்வையிடலாம் என கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்ற பதிவாளர் அறிவித்துள்ளார். (நி-5-6)

# கஞ்சா கடத்தல்காரர்களுக்கு 150,000 ரூபாய் தண்டம்

(கண்டாவளை)

கிளிநொச்சி கட்டைக்காடு பகுதியில் கஞ்சாவுடன் கைது செய்யப்பட்ட மற்றும் கஞ்சா கடத்தலுக்கு உடந்தையாக இருந்த குற்றவாளிகளுக்கு கிளிநொச்சி மேல் நீதிமன்றத்தால் ஒரு லட்சத்து ஐம்பதாயிரம் ரூபாய் தண்டப் பணம் விதிக்கப்பட்டுள்ளது.

கட்டைக்காடு பகுதியில் மோட்டார் சைக்கிள் ஒன்றில் கஞ்சா கடத்திய ஒருவரையும் அதற்கு உடந்தையாக இருந்த மற்றுமொருவரையும் பொலிஸார் கைது செய்ததுடன் கடத்தலுக்கு பயன்படுத்திய மோட்டார் சைக்கிளும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டு கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றத்தில் குறித்த இருவருக்கு எதிராக வழக்கு தொடரப்பட்ட நிலையில் குறித்த வழக்கு நேற்று முன்தினம் கிளிநொச்சி மேல் நீதிமன்ற நீதிபதி எ.எம். எம்.சஹாப்தீன் முன்னிலையில் வழக்கு தீர்ப்புக்காக எடுத்துக்கொள்ளப்பட்டது.

குறித்த இருவருக்கும் முற்குற்றங்கள் எதுவும் இல்லை என்பதை கவனத்தில் கொண்டதுடன் குறித்த குற்றச்சாட்டுகளுக்கு தண்டனையாக முதலாம் எதிரிக்கு ஐம்பதாயிரம் ரூபாய் தண்டப்பணமும் செலுத்த தவறும் பட்சத்தில் ஆறு மாதகால சாதாரண சிறை தண்டனையுடன் இரண்டாவது எதிரிக்கு எதிராக சாட்டப்பட்டுள்ள இரண்டு குற்றச்சாட்டுகளுக்கும் தலா ஐம்பதாயிரம் ரூபா தண்டப்பணமும் செலுத்த தவறும் பட்சத்தில் தலா ஆறு மாதகால சாதாரண சிறை தண்டனையுடன் குற்றச்சாட்டுக்கு பயன்படுத்தப்பட்ட நிலையில் பொலிஸாரால் மீட்கப்பட்டு நீதிமன்றத்தில் பாரப்படுத்தப்பட்டிருந்த நிலையில் பிணையில் விடுவிக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிளையும் பறிமுதல் செய்து மாறும் மேல் நீதிமன்றம் கட்டளையிட்டுள்ளது. (நி-5-6-315-316)

# 477 கிலோ பீடி இலைகள் மீட்பு



(கொழும்பு)

கற்பிட்டி - இப்பந்தீவு கடற்பிரதேசத்தில் உள்ள வீடொன்றில் இருந்து 477 கிலோ கிராம் பீடி இலைகள் கடற்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளதுடன், சந்தேக நபர் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த கடற்பிரதேசத்தில் வடமேற்கு கடற்படை கட்டளைக்கு சொந்தமான விஜய கடற்படையினர் நேற்று முன்தினம் விஷேட கண்காணிப்பு ரோந்து நடவடிக்கைகளை மேற்கொண்ட போது கடற்பிரதேசத்தில் சந்தேகத்திற்கு இடமான முறையில் உரப்பைகள் மிதந்துகொண்டிருப்பதை அவதானித்த கடற்படையினர், குறித்த உரப்பைகளை சோதனைக்கு உட்படுத்திய வேளை சட்டவிரோதமாக கொண்டுவரப்பட்டதாக சந்தேகிக்கப்படும் பீடி இலைகள் அடங்கிய 14 மூடைகள் கைப்பற்றப்பட்டுள்ளன. (நி-5-6)

# தாழிறங்கிய கிணறு

(தருமபுரம்)

தருமபுர பகுதியில் கிணறு ஒன்று முற்றுமுழுதாக தாழ் இறங்கி உள்ளது. கடந்த சில நாட்களாக பெய்த கன மழையால் கிளிநொச்சி கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட தருமபுரம் பகுதியில் ஒரு நபரின் காணிக்குள் இருந்த கிணறு தாழ் இறங்கியதுடன் அருகில் பொருத்தப்பட்டிருந்த நீர் இறைக்கும் பம்பி ஒன்றும் கிணற்றில் மூழ்கியுள்ளது.

குறித்த கிணற்றில் இருந்து நீரினை அயலில் உள்ளவர்கள் பலரும் பயன்படுத்தி வந்த நிலையில் கிணறு தாழ் இறங்கி இருப்பதனால் வெள்ள நீர் உட்சென்று குறித்த நீரினை பாவனைக்கு பயன்படுத்த முடியாமல் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-5-6-316)

# அனர்த்தங்களை தவிர்க்க சிரமதானம் முன்னெடுப்பு

(முறிகண்டி)

வெள்ள அனர்த்தத்தை கட்டுப்படுத்துவதற்கு முன்னாயத்த செயற்பாடாக முறிகண்டி மக்கள் நேற்று சிரமதான பணியில் ஈடுபட்டனர்.

பிரதான வாய்க்கால்களில் காணப்படும் பற்றைகளுக்கிடையில் உக்கும், உக்காத பொருட்கள் அடைபட்டு வெள்ள நீர் மக்கள் குடியிருப்புகளிற்குள் உட்புகுவதால் மக்கள் பல்வேறு இன்னல்களை எதிர்கொண்டு வரும் நிலை ஏற்பட்டதுடன், போக்குவரத்து செய்வதிலும் பாதிப்பு ஏற்பட்டு வருகின்றது.

இந் நிலையில் முறிகண்டி வர்த்தகர் சங்கம், கிராம மட்ட அமைப்புக்கள் பொதுமக்களுடன் இணைந்து பிரதான வாய்க்கால்களில் காணப்பட்ட பற்றைகள் மற்றும் பெரும் தொகையான பிளாஸ்ரிக் போத்தல்களை அகற்றி வெள்ள நீர் தடையின்றி வாய்க்கால்கள் ஊடாக கடந்து செல்லும் வகையில் தூர்வாரப்பட்டது. (நி-5-06)


**வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை- மானிப்பாய்**
**ஆதனவரி செலுத்துதல் தொடர்பான அறிவித்தல்**

வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபையின் ஆளுகைக்குட்பட்ட பிரதேசங்களில் அசைவற்ற ஆதனங்களைக் கொண்டிருப்பவர்கள் அல்லது இருப்பாட்சியாளர்கள் குறித்த ஆதனங்களுக்குரிய இவ்வாண்டுக்கான ஆதனவரி மற்றும் நிலுவைத் தொகையினை பிரதேச சபையின் தங்கள் பிரிவுக்குட்பட்ட உப அலுவலகங்களில் 10.12.2023 ஆம் திகதிக்கு முன்னர் செலுத்துமாறு கேட்டுக்கொள்கின்றேன். சபையின் ஆதனவரி செயற்பாடுகளை கணனிமயப்படுத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளமையால் 11.12.2023 ஆம் திகதி முதல் 31.12.2023 ஆம் திகதி வரை ஆதனவரி அறவீடுகள் மேற்கொள்ளப்படமாட்டாது என்பதனையும் அறியத்தருகின்றேன்.


**செயலாளர்,**
**வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை,**
**மானிப்பாய்.**

(C-7708) 24.11.2023


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்கியின் பாகம் - 2
# பொன்னியின் செல்வன்
## காவியத் தொடர் 337





'எப்படியாவது அவனை நான் கண்டுபிடித்துத் திரும்ப அழைத்து வருகிறேன். அவனை மன்னித்து விட வேண்டும்' என்று கோட்டைத் தலைவரிடம் நிபந்தனை பேசிக்கொண்டு புறப்பட்டேன். கோட்டையைச் சுற்றியுள்ள வடவாற்றங்கரையோடு அந்த நள்ளிரவில் சென்றேன். யாரையும் பின்னோடு அழைத்துப் போய் என் நண்பனை அவமானப்படுத்த விரும்பவில்லை. கோட்டையிலிருந்து, தப்பியவன் எப்படியும் மதில் வழியாகத் தான் வெளியில் வரவேண்டுமல்லவா? முன்னமே வெளியே வந்திருந்தாலும் பக்கத்துக் காடுகளிலே தான் மறைந்திருக்க வேண்டும். ஆகையால் வடவாற்றங்கரையோடு போனேன். ஒருவன் செங்குத்தான கோட்டை மதில் சுவர் வழியாக இறங்கி வருவது மங்கிய நிலா வெளிச்சத்தில் தெரிந்தது. உடனே அங்கே போய் நின்றேன். அவன் இறங்கியதும், 'நண்பா! இது என்ன வேலை?' என்றேன். அந்தச் சண்டாளன் உடனே என் மார்பில் ஒரு குத்து விட்டான். யானைகள் இடித்தும் நலுங்காத என் மார்பை இவனுடைய குத்து என்ன செய்யும்? ஆயினும் நல்ல எண்ணத்துடன் அவனைத் தேடிப்போன என்னை அவன் குத்தியது பொறுக்கவில்லை. நானும் குத்திவிட்டேன். இருவரும் துவந்த யுத்தம் செய்தோம். அரை நாழிகையில் அவன் சக்தி இழந்து அடங்கிப் போனான். என்னிடம் 'நீ வந்த காரணத்தை உண்மையாகச் சொல்லிவிடு! நான் உன்னை மன்னித்து உனக்கு வேண்டிய உதவி செய்கிறேன்!' என்றேன்.

'களைப்பாயிருக்கிறது, எங்கேயாவது உட்கார்ந்து சொல்கிறேன்' என்றான். 'சரி' என்று சொல்லி அழைத்துச் சென்றேன். முன்னால் வழி காட்டிக் கொண்டு போனேன். திடீரென்று அந்தப் பாவி முதுகில் கத்தியினால் குத்தி விட்டான். அரைச்சாண் நீளம் கத்தி உள்ளே போய் விட்டது. தலை சுற்றியது கீழே விழுந்து விட்டேன். அந்தச் சிநேகத் துரோகி தப்பி ஓடி விட்டான்! மறுபடி நான் கண் விழித்து உணர்வு வந்து பார்த்தபோது ஓர் ஊமை ஸ்திரீயின் வீட்டில் இருந்ததைக் கண்டேன்."

கந்தன்மாறனின் கற்பனைக் கதையைக் கேட்டு நந்தினி தன் மனத்திற்குள்ளே சிரித்தாள். குந்தவை தேவிக்கு அதை எவ்வளவு தூரம் நம்புவது என்று தீர்மானிக்க முடியவில்லை.

"ஊமை ஸ்திரீயின் வீட்டுக்கு எப்படி வந்து சேர்ந்தீர்கள்? யார் கொண்டு சேர்த்தது?" என்றாள்.

"அதுதான் எனக்கும் விளங்காத மர்மமாக இருக்கிறது. அந்த ஊமைக்கு ஒன்றுமே தெரியவில்லை. தெரிந்தாலும் சொல்ல முடியவில்லை. அவளுக்கு ஒரு புதல்வன் உண்டாம். அவனையும் அன்றிலிருந்து காணவே காணோம். எப்படி மாயமாய் மறைந்தான் என்று தெரியாது. அவன் திரும்பி வந்தால் ஒரு வேளை கேட்கலாம். இல்லாவிடில் பழுவூர் வீரர்கள் என் நண்பனைப் பிடிக்கும் வரையில் காத்திருக்க வேண்டியதுதான்."

"அவன் அகப்பட்டு விடுவான் என்று நினைக்கிறீர்களா?"

"அகப்படாமல் எப்படித் தப்ப முடியும்? சப்பட்டை கட்டிக் கொண்டு பறந்து விட முடியாதல்லவா? அதற்காகவே, அவனைப் பார்ப்பதற்காகவே, இங்கே காத்திருக்கிறேன். இல்லாவிடில் ஊர் சென்றிருப்பேன். இன்னமும் அவனுக்காகப் பழுவூர் அரசர்களிடம் மன்னிப்புப் பெறலாம் என்று நம்பிக்கை எனக்கு இருக்கிறது."

"ஐயா! தங்களுடைய பெருந்தன்மையே பெருந்தன்மை!" என்றாள் இளைய பிராட்டி. அவளுடைய மனம் 'வந்தியத்தேவன் அகப்படக் கூடாது அவன் துரோகியாயிருந்தாலும் சரிதான்!' என்று எண்ணமிட்டது.

அச்சமயத்தில் அரண்மனைத் தாதி ஒருத்தி ஓடி வந்து, "அம்மா! ஒற்றன் அகப்பட்டுவிட்டான்! பிடித்து வருகிறார்கள்!" என்று கத்தினாள். நந்தினி, குந்தவை இருவருடைய முகத்திலும் துன்ப வேதனை காணப்பட்டது நந்தினி விரைவில் அதை மாற்றிக் கொண்டாள். குந்தவையினால் அது முடியவில்லை. (தொடரும்...)

---



# சிறுவர் அரங்கம்

## முதல் வழக்கில் வெற்றி

ஒரு நாள் சக்கரவர்த்தி அக்பர் தர்பாரில் கூடியிருந்தவர்களை நோக்கி, "நமது நீதி மன்றத்தில் வழக்கு விசாரணைகள் ஒழுங்காக நடைபெறுகின்றனவா?" என்று கேட்டார். "மிகவும் சிறப்பாக நடைபெறுகின்றன, பிரபு! நமது நீதிபதி ஏழை, பணக்காரன் என்ற பாகுபாடு பார்க்காமல் நியாயமாக நீதி வழங்குகிறார்!" என்று ஒரு அதிகாரி நீதிபதியைப் புகழ்ந்தார்.



பிறகு தர்பாரில் இருந்த அனைவரும் அதை ஆமோதிக்க, நீதிபதிக்கு உச்சி குளிர்ந்து விட்டது. ஆனால் பீர்பால் மட்டும் எதுவும் பேசாமல் மௌனமாக இருந்ததை கவனித்த அக்பர், "பீர்பால்! நீ மட்டும் ஏன் மௌனமாக இருக்கிறாய்? மற்றவர்கள் கூறியது முற்றிலும் தவறு என்று நினைக்கிறாயா?" என்று கேட்டார்.

"முற்றிலும் தவறு என்று சொல்லமாட்டேன். ஆனால் நமது வழக்கு விசாரணைகளும், நீதி வழங்குதலும் திருப்திகரமாக உள்ளது என்று நான் சொல்ல மாட்டேன்" என்றார் பீர்பால்.

அக்பர் அவரை மேலும் விளக்கம் கேட்க நினைக்கையில், வாயிற்காவலன் உள்ளே நுழைந்து, "பிரபு! ஒரு கிழவரும், இளைஞரும் நியாயம் கேட்டு வந்திருக்கிறார்கள்" என்றான். "அவர்களை வரச்சொல்!" என்றார் அக்பர்.

உடனே, தர்பாரில் ஒரு கிழவரும், ஓர் இளைஞனும் உள்ளே நுழைந்து சக்கரவர்த்தியை வணங்கினர். "என்ன விஷயம்? உங்களில் யாருக்கு என்ன குறை?" என்று கேட்டார் அக்பர்.

"பிரபு! என் பெயர் அப்துல் ரஹ்மான்" என்று தன்னை அறிமுகப்படுத்திக் கொண்ட கிழவர் தொடர்ந்து, "நான் ஒரு சட்ட நிபுணன்! மாணவர்களுக்கு சட்டத்தின் நுணுக்கங்களையும், வழக்கு விசாரணைகளைப் பற்றியும் கற்பிக்கிறேன்.

இதோ நிற்கிறானே பிரமோத் பிஹாரி! இவன் என் மாணவனாக இருந்தவன்! இவன் மீது நான் குற்றம் சாட்ட வந்துள்ளேன்" என்றார். அந்த இளைஞன் செய்த குற்றம் குறித்து அக்பர் கேட்டார். "பிரபு! இவன் என்னிடம் மாணவனாக சேர விரும்பிய போது, நான் மாதம் மூன்று பொற்காசு வீதம் குரு தட்சிணை தர வேண்டுமென்றும், ஓராண்டு காலம் சட்டம் படிக்க வேண்டும் என்றும் கூறினேன்.

ஆனால் இவன் தான் பரம ஏழை என்றும், தட்சிணை கொடுக்க இயலாது என்றும் கூறினான். படிப்பு முடிந்ததும் வழக்கறிஞனாகி முதல் வழக்கில் வெற்றி பெற்றவுடன், முப்பத்தாறு பொற்காசுகள் சேர்த்து தருவதாகவும் வாக்களித்தான். அதை நம்பி இவனுக்கு ஓராண்டு காலம் கற்பித்தேன்.

இவன் மிகவும் கெட்டிக்கார மாணவன் என்பதால் ஓராண்டிலேயே மிகச் சிறப்பாக சட்ட நுணுக்கங்களைக் கற்றுக் கொண்டு விட்டான். நானும் இவன் வழக்கறிஞனாகி, முதல் வழக்கிலேயே வெற்றி பெறுவான் என்றும், தட்சிணையை மொத்தமாகக் கொடுப்பான் என்றும் நம்பினேன்" என்று சொல்லி நிறுத்தினார் கிழவர்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேன்மைக்குரிய அனைத்துச் சாதனைகளும் ஊக்கத்தினாலும் இதய பூர்வமாகவும் செய்யப் பட்டவையே! – ஜேம்ஸ் ஆலன்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## குடியுரிமையைப் பறித்து சொத்தை மீளப்பெற வேண்டும்

நாட்டின் பொருளாதாரத்தை அதலபாதாளத்தில் வீழ்த்தியவர்கள் மகிந்த ராஜபக்ஷ, கோட்டாபய ராஜபக்ஷ, பசில் ராஜபக்ஷ என்று உயர்நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளது.

மேற்குறித்த மூவரும் பொருளாதாரக் குற்றவாளிகள் என்பது இந்த நாட்டின் உயர்நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு.

இங்குதான் ஒரு விடயத்தை நாம் கவனித்தாக வேண்டும்.

அதாவது பொருளாதாரக் குற்றவாளிகள் என்பது பொருளாதார நெருக்கடி ஏற்படுவதற்குக் காரணமானவர்கள் என்பது மட்டுமல்ல.

மாறாக நாட்டின் பொருளாதாரத்தை சூறையாடியவர்கள் என்பதும் அந்தத் தீர்ப்புக்குள் அடங்கியுள்ள முக்கிய அம்சம்.

ஆக, இந்த நாட்டின் பொருளாதாரம் இந்தளவு தூரம் மோசமடைவதற்குக் காரணமானவர்கள் யார் என்பதை உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பு வெளிப்படுத்தியுள்ளது.

உண்மையில் ராஜபக்ஷ தரப்புக்கு எதிராக மக்கள் புரட்சி செய்தபோது, ராஜபக்ஷக்களைக் கைது செய்து சிறையில் அடைத்திருக்க வேண்டும்.

ஆனால் அவர்கள் ரணில் விக்கிரமசிங்கவிடம் ஜனாதிபதிப் பதவியை ஒப்படைத்து தங்களைப் பாதுகாத்துக் கொண்டனர்.

ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க பதவியேற்றுக் கொண்டதும் இந்த நாட்டின் பொருளாதாரத்தை யார் சூறையாடினார்களோ – அதற்கு யார் உடந்தையாக இருந்தார்களோ அவர்களைக் கைது செய்து சிறையில் அடைப்பதை உறுதி செய்திருக்க வேண்டும்.

ஆனால் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ராஜபக்ஷ தரப்பைக் காப்பாற்றுவதிலேயே கண்ணும் கருத்துமாக இருந்தார்.

சரி, அவர்கள்தான் பொருளாதாரக் குற்றவாளிகள் என்பதற்கு உரிய ஆதாரங்கள் கிடைக்கவில்லை. இதன் காரணமாக என்னால் எதுவும் செய்ய முடியவில்லை என்று கூறி தனது பொறுப்பில் இருந்து ஜனாதிபதி ரணில் விலகிக் கொள்ளலாம்.

ஆனால் இப்போது பொருளாதாரக் குற்றவாளிகள் யார் என்பதை உயர்நீதிமன்றம் உறுதி செய்திருக்கிறது.

பொருளாதாரக் குற்றவாளிகளை உயர்நீதிமன்றம் இனங்காட்டிய பின்பேனும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுத்திருக்க வேண்டும். எனினும் அதுவும் நடந்தாகவில்லை.

இங்குதான் பொருளாதாரக் குற்றவாளிகளின் குடியுரிமை பறிக்கப்பட வேண்டும் என்ற கருத்தை எதிர்க்கட்சிகள் முன்வைக்கத் தொடங்கியுள்ளன.

உண்மையில் இந்த நாட்டின் பொருளாதார நெருக்கடியைத் தீர்ப்பதாயின், ஆட்சித் தரப்பால் சூறையாடப்பட்ட சொத்துக்கள் உரியவர்களிடம் இருந்து பறிமுதல் செய்யப்படுவதுடன் அவர்களின் குடியுரிமையும் பறிக்கப்பட வேண்டும்.

அதுவே இலங்கையின் நிலைத்த பாதுகாப்புக்கு அவசியமானது.

## கொக்குத்தொடுவாய் மனித புதைகுழி
# எலும்புக்கூடுகள், சன்னங்கள் நேற்றைய அகழ்வில் மீட்பு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு கொக்குத்தொடுவாய் மனித புதைகுழியின் அகழ்வு பணியானது மீள ஆரம்பிக்கப்பட்டு நேற்று நான்காவது நாளாக தொடர்ந்து நடைபெற்றிருந்தது.

நேற்று மூன்று மனித எலும்புக்கூடுகள் முழுமையாகவும் இரண்டு எலும்புக்கூடுகள் பகுதியளவிலும் மீட்கப்பட்டுள்ளன இதனுடன் துப்பாக்கி குண்டு சன்னங்கள் மற்றும் குண்டு சிதறல்கள் இலக்கத் தகடுகள் என்பன மீட்கப்பட்டுள்ளன இது வரையில் மொத்தமாக 26 மனித எலும்புக்கூடுகள் மீட்கப்பட்டுள்ளன.

நான்காவது நாளான நேற்றையதினம் முல்லைத்தீவு நீதவான் நீதிமன்ற நீதிபதி தர்மலிங்கம் பிரதீபன் முன்னிலையில் முல்லைத்தீவு மாவட்ட சட்டவைத்திய அதிகாரி க.வாசுதேவ, தடயவியல் பொலிஸார், கிராம சேவையாளர் ஆகியோரின் பங்கேற்புடன், தொல்லியல் பேராசிரியர் ராஜ் சோமதேவ தலைமையிலான குழுவினரால் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

இன்று வெள்ளிக்கிழமை விஷேட ஸ்கான் இயந்திரம் மூலம் இவ் மனித புதைகுழியானது எவ்வளவு தூரம் வியாபித்து இருக்கின்றது என்ற சோதனை நடைபெறவுள்ளதாக முல்லைத்தீவு மாவட்ட விஷேட சட்ட வைத்திய அதிகாரி கனகசபாபதி வாசுதேவ தெரிவித்துள்ளார். (ம-7,299)

# மின்சாரம் தாக்கி இளைஞன் பலி

புத்தளம் - முந்தல் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கீரிமட்டாவ பகுதியில் மின்சாரம் தாக்கி இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

முந்தல் - அக்கர 60 கிராமத்தைச் சேர்ந்த 26 வயதான இளைஞர் ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர்.

முந்தல் - கீரிமட்டாவ பகுதியைச் சேர்ந்த வர்த்தகர் ஒருவரின் வேண்டுகோளுக்கு இணங்க, குறித்த வீதியோர மின்விளக்குகளை பொருத்தும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்த போதே குறித்த இளைஞன் இந்த அனர்த்தத்திற்கு முகம் கொடுத்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

குறித்த இளைஞன் ஏணி ஒன்றின் மூலம் மின்சாரத் தூணில் ஏறி மின்குமிழை பொருத்திக் கொண்டிருந்த போது திடீரென மின்சாரம் தாக்கியுள்ளது.

இதனையடுத்து, மின்சாரத் தாக்குதலுக்கு உள்ளான குறித்த இளைஞனை அங்கிருந்தவர்கள் உடனடியாக வைத்தியசாலைக்கு கொண்டு சென்ற போதிலும் அவர் அங்கு சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்த இளைஞனின் சடலம் பிரேத பரிசோதனைக்காக புத்தளம் தள வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.(ம-7)

## வவுனியாவில் மழை காரணமாக
# 7 குடும்பங்களை சேர்ந்த 18 பேர் பாதிப்பு

(வவுனியா)

வவுனியா, செட்டிகுளம் பகுதியில் மழை காரணமாக 7 குடும்பங்களைச் சேர்ந்த 18 பேர் பாதிப்படைந்துள்ளதுடன், 7 வீடுகளும் பகுதியளவில் சேதமடைந்துள்ளதாக மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையம் நேற்று தெரிவித்துள்ளது.

வவுனியாவில் கடந்த சில நாட்களாக மழை பெய்து வருகின்றது. இந்நிலையில் மழை மற்றும் காற்று காரணமாக வவுனியா, செட்டிகுளம் பிரதேச செயலக பிரிவில் உள்ள சில கிராமங்கள் பாதிப்படைந்துள்ளன.

அந்தவகையில், ஆண்டியாபுளியங்குளம் கிராம அலுவலர் பிரிவில் 3 குடும்பங்களைச் சேர்ந்த 8 பேரும், நேரியகுளம் கிராம அலுவலர் பிரிவில் ஒரு குடும்பத்தைச் சேர்ந்த ஒருவரும், சூடுவெந்தபுலவு கிராம அலுவலர் பிரிவில் 2 குடும்பங்களைச் சேர்ந்த 6 பேரும், பெரியபுளியங்குளம் கிராம அலுவலர் பிரிவில் ஒரு குடும்பத்தைச் சேர்ந்த 3 பேரும் என 7 குடும்பங்களைச் சேர்ந்த 18 பேர் பாதிப்படைந்துள்ளனர்.

அத்துடன், குறித்த குடும்பங்கள் வசித்து வந்த 7 வீடுகளும் பகுதியளவில் சேதமடைந்துள்ளதாக மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது. (ம-7,250)

# வெளிநாடு செல்ல கெஹலியவுக்கு அனுமதி

சுற்றாடல் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்லவுக்கு எதிர்வரும் நவம்பர் மாதம் 30ஆம் திகதி முதல் அடுத்த ஆண்டு பெப்ரவரி மாதம் 29ஆம் திகதி வரை வெளிநாடு செல்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

குறித்த அனுமதியை நேற்று கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி நவரத்ன மாரசிங்க வழங்கியுள்ளார்.

2015ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலின் போது, தொலைக்காட்சி கூட்டுத்தாபனத்தின் பணத்திலிருந்து G.I.B ஐ கொள்வனவு செய்ததன் மூலம் அரசாங்கத்திற்கு நஷ்டம் ஏற்படுத்தியதாகத் தொடரப்பட்ட வழக்கின் விசாரணையின் போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல சில கடமைகளுக்காக வெளிநாடு செல்ல அனுமதிக்குமாறு அமைச்சர் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி நீதிமன்றில் அறிவித்தார்.

இந்நிலையில் குறித்த அனுமதி வழங்கிய நீதிபதி, அவருக்கு எதிராக ஒதுக்கப்பட்ட வழக்கை எதிர்வரும் டிசம்பர் மாதம் 01 ஆம் திகதி மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளுமாறு உத்தரவிட்டுள்ளார். (ம-7)

**வடமாகாண மரநடுகை மாதம்**
**கார்த்திகை - 2023**

**"பூட்டன் நாட்டிய பனைமரம் காய்க்கிறது பாட்டன் நட்ட பலா மரம் பூக்கிறது**
**வெட்டி எரித்ததன்றி நீயென்ன நிழல் வைத்தாய்**
**மாசடையாய்ச் சூழல் சாவடையா வாழல்!"**

– கவிஞர் புதுவை இரத்தினதுரை

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை **சனிக்கிழமை காலை 08.30 மணியிலிருந்து மாலை 5.00 மணிவரை யாழ். பிரதேசத்தில்** இடைக்காடு, கதிரிப்பாய்,தம்பாலை, வளலாய் விமான நிலைய சந்தி ஆகிய இடங்களிலும் **மன்னார் பிரதேசத்தில்** அந்தோனிப்பிள்ளை ஐஸ் தொழிற்சாலை, கூல் மென் ஐஸ் தொழிற்சாலை, எருக்கலம்பிட்டி நீர் வழங்கல் திட்டம். NAQDA-Oluthuduwai, கடற்படை முகாம். ஒலைத் தொடுவாய், புதிய சில்க் ரோடு அகுடிக் கம்பெனி பிரைவேட் (லிமிடெட்) (கடல் உணவு கழஞ்சியம்). பெரியகரைசல் பல்மெய்ரா ஹவுஸ், பல்மெய்ரா ஹவுஸ், தலைமன்னார். தலைமன்னார் வைத்தியசாலை, தலைமன்னார் கடற்படை முகாம், வங்காலைப்பாடு செண்ட் லார்ட்ஸ் ஐஸ் தொழிற்சாலை, Angels Maryan Aqua Farm, நடுக்குடா, பேசாலை - ஐஸ் தொழிற்சாலை, Grotto of lady lourds church Pesalai, கட்டுகாரங்குடியிருப்பு, கரைசல் திட்டம், கீழியங் குடியிருப்பு, கொன்னையன் குடியிருப்பு, குருசுபாடு கடற்படை முகாம், மாலுவாடி சந்தி, ஒலைத்தொடுவாய், படப்பாடி நீர் வழங்கல், பருத்திப் பண்ணை, பாவிலுப்பட்டான் குடியிருப்பு, பெரியகரைசல், பேசாலை, சிலாவத்தை முகாம் சந்தி, சிறுதோப்பு, Thailankudirippu Junction, தலை மன்னார், தலைமன்னார், தலைமன்னார் கப்பல் வீடமைப்பு திட்டம், தலைமன்னார் புகையிரத நிலையம், தாராபுரம், Thoddaveli Beach RD, Konniyankudirippu, துள்ளுகுடியிருப்பு தும்பு தொழிற்சாலை, துள்ளு குடியிருப்பு திட்டம் வங்காலைப்பாடு ஆகிய ஆகிய பிரதேசத்தில் மின்சாரம் தடைப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளாதார நெருக்கடியில் இருந்து தப்பிக்க சர்வதேச நாணய நிதியம் செய்த பரிந்துரைகள் பற்றிய ஒரு மேலோட்ட பார்வை



06

கலாநிதி க.தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.
தவிசாளர்- எல்லை நிர்ணய ஆணைக்குழு.

**பரிந்துரைகளின் செயற்பாடுகள் பற்றி.......**

துறைகள்/திணைக்களங்கள் ஒவ்வொன்றிற்கும் வழங்கப்பட்டுள்ள பரிந்துரைகள் உட்பட இந்த 16 பரிந்துரைகளை இலங்கை நிச்சயமாக நடைமுறைப்படுத்த வேண்டும் என சர்வதேச நாணய நிதியம் பரிந்துரைக்கின்றது.

அவர்களின் நீட்டிக்கப்பட்ட கடன் வசதியை முறையாக நிர்வகிப்பதன் மூலம் பொருளாதார நெருக்கடியிலிருந்து தப்பிப்பதற்காக இந்த பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்று அவர்கள் சுட்டிக் காட்டுகின்றனர்.

இந்த வழிகாட்டுதல்களில் உள்ள பெரும்பாலான பரிந்துரைகள் மோசடி மற்றும் ஊழலைத்தடுப்பது, வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புணர்வை அதிகரிப்பது தொடர்பானவை.

அவர்கள் அவதானித்த இலங்கைப் பொருளாதாரத்தின் வீழ்ச்சிக்குக் காரணமான பல காரணிகள் மேற்கூறிய நிபந்தனைகள் உரிய அளவில் பூர்த்தி செய்யப்படாமையே காரணம் என இந்த அறிக்கை கூறுகிறது.

எனவே, ஆளுகை பலவீனங்களை முழுமையாக நிவர்த்தி செய்வதற்கு நடுத்தர மற்றும் நீண்டகால முன் முயற்சிகள் மற்றும் குறிப்பிடத்தக்க வளங்கள் மற்றும் இலங்கையின் சர்வதேச பங்காளிகளின் ஆதரவு உட்பட நீண்டகால முயற்சிகள் தேவைப்படும் என்பதை இந்த அறிக்கை சுட்டிக்காட்டுகிறது.

முன்னர் கூறியது போல பரிந்துரைகள் ஒவ்வொன்றும் இலங்கையில் ஆளுகை செயன்முறையில் உள்ள குறைபாடுகள், நிறுவனமயப்படுத்தப்பட்டுள்ள ஊழல் மோசடி, ஊழல் கலாசாரம், அதிகார துஷ்பிரயோகம், வெளிப்படைத்தன்மை இன்மை, பொறுப்புக்கூறல் தொடர்பான பிரச்சினைகளை முடிவுக்கு கொண்டு வரும் நோக்கத்தினை அடிப்படையாகக் கொண்டவையாக காணப்படுகின்றது.

அதாவது இலங்கையில் ஊழலற்ற ஒரு ஆளுகை (corruption – free governance process). செயன்முறையைக் கட்டியெழுப்ப வேண்டும் என்பதையே ஆளமாக வலியுறுத்துகிறது. அறிக்கை முன்வைத்துள்ள 16 பரிந்துரைகளையும் நடைமுறைப்படுத்த கால அவகாசத்தையும் வழங்கியிருப்பது ஒரு சிறப்பம்சமாக காணப்படுகிறது.

வெளிநாட்டுக் கடனை மறுசீரமைத்தல், அரசாங்கத்தின் உள்நாட்டுக் கடனை மறுசீரமைத்தல் தொடர்பாக கடன் வழங்கும் நாடுகளுடன் ஒப்பந்தங்களை மேற்கொள்வது அவற்றில் முக்கியமானது. இவை தொடர்பாக அரசு பல்வேறு ஒப்பந்தங்களை செய்துள்ளது.

அதாவது, வெளிநாட்டுக்கடன் மறுசீரமைப்பு தொடர்பில் இறுதி உடன்பாடு எட்டப்படாத போதிலும், அது தொடர்பான கலந்துரையாடல்களில் முன்னேற்றம் காணப்படுகின்றது. மேலும், உள்ளூர் கடனை மறுசீரமைப்பதற்காக பாராளுமன்றத்தின் ஒப்புதலுடன் பல்வேறு விடயங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

ஊழலுக்கு எதிரான பொறிமுறையை அமைப்பது தொடர்பாக, ஊழல் தடுப்பு மசோதா பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது. ஒரு சட்டத்தை நிறைவேற்றுவதன் மூலம் மோசடி மற்றும் ஊழலைக் கட்டுப்படுத்த முடியுமா என்பது இங்கு எழும் கேள்வியாகும். நீதித்துறையின் சுதந்திரமும் வலிமையும் அவசியம்.

காவலத்துறையை பாரபட்சமற்ற அமைப்பாக மாற்றுவதும் முக்கியம். சுயாதீன ஆணைக்குழுக்கள் மீது செல்வாக்கு செலுத்தும் நிறைவேற்று அதிகாரியின் திறனை தடுக்கும் வகையில் ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும். அதாவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையில் மாற்றம் வேண்டும் என்கிறது.

பட்ஜெட் பற்றாக்குறையை கட்டுப்படுத்த வேண்டும் என்றும் IMF பரிந்துரைக்கிறது. நாட்டில் மீண்டும் இவ்வாறான பொருளாதார நெருக்கடி ஏற்படாத வகையில் நிதி மற்றும் நிதிக்கொள்கைகளை சீர்செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமெனவும், தற்போதுள்ள முறைமையையும் மாற்றியமைக்க வேண்டியது அவசியம் எனவும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

சட்டங்களை அடிப்படையாகக் கொண்ட கொள்கைகளை உருவாக்குதல், மத்திய வங்கி மூலம் அரசாங்கம் எடுக்கும் கடன்களுக்கு சட்டக்கட்டுப்பாடுகள் விதித்தல் மற்றும் பணம் அச்சிடுவதற்கு கட்டுப்பாடுகள் போன்றவற்றை நடைமுறைப்படுத்த வேண்டும்.

அரசியல் மற்றும் நிர்வாகத்தின் தலையீடு இல்லாமல் நிதிக்கொள்கையைகையாள்வது தொடர்பான சட்டக்கட்டமைப்பை உருவாக்கியுள்ளது. இது மத்திய வங்கியை பொறுப்புக் கூற வைக்கும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. இந்த விடயங்கள் அடிப்படையில் தற்போதுள்ள அமைப்பில் மாற்றத்தை எதிர்பார்க்கின்றன.

சர்வதேச நாணய நிதியத்துடன் உடன்பட்ட திட்டத்தில் உள்ள மற்ற திட்டங்களில், தொழிலாளர் சந்தை தொடர்பான சட்டங்களின் சீர்திருத்தம் ஒன்றாகும்.

அது பற்றிய விவாதங்கள் நடைபெற்று வருகின்றன. இதற்கு, பல்வேறு தரப்பினரும் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றனர். நில சீர்திருத்த சட்டங்கள் குறித்தும் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

IMF கடன் வசதியின் இரண்டாவது தவணையின் கீழ் அடிப்படைகள் செயல்படுத்தப்பட்டாலும், தற்போதுள்ள அமைப்பை மாற்ற உண்மையான சீர்திருத்தங்கள் தேவை. அவை சரியாக நடக்கின்றன என்று சொல்வது கடினம்.

அரசாங்கம் முன்வைத்த "அஸ்வசும" என்ற புதிய சமூக பாதுகாப்பு திட்டத்திற்கு தகுதியானவர்கள் தெரிவு செய்யப்பட்ட விதம் குறித்து தற்போது பல்வேறு விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றன.

இதில் தகுதியற்றவர்கள் அதிக அளவில் சேர்க்கப்பட்டிருப்பதாக கடும் விமர்சனம் எழுந்துள்ளது. இந்நிலையில், அரசாங்கத்தின் இந்த புதிய சமூகப் பாதுகாப்புத் திட்டத்தை அமுல்படுத்தும் போது ஊழலும் மோசடிகளும் இடம் பெறுவதாக சர்வதேச நாணய நிதியம் உணரலாம்.

இந் நிலைமை தற்போதுள்ள அமைப்பின் பல வீனமாகவே அடையாளப்படுத்தப்படுகின்றன. பொதுவான கருத்துப்படி, சர்வதேச நாணய நிதியத்தின் முன்மொழிவுகளுடன் நிறுவன சீர்திருத்தங்களை உருவாக்குவது, ஜனநாயகத்தை வலுப்படுத்துவது மற்றும் மிகவும் வெளிப்படையான அரசியல் மற்றும் பொருளாதார அமைப்பை உருவாக்குவது மிகவும் முக்கியமானது.

நாம் இதுவரை செயல்படுத்தியவை IMF இன்முதல் முன்னேற்றம் மதிப்பாய்வில் பாராட்டப்பட்டது. மேலும், அந்த நிறுவனம் தனது இரண்டாவது கடன் தவணையை வழங்காத அளவுக்கு இலங்கை மீது அவநம்பிக்கையுடன் இருக்க முடியாது என்று நான் நம்புகிறேன்.

எவ்வாறாயினும், தற்போதுள்ள அமைப்பை மாற்றுவதற்கான பயிற்சியில் நாம் தொடர்ந்து ஈடுபட வேண்டும். தற்போதுள்ள அரசியல் கலாசாரத்தை மாற்றுவது முக்கியம். ஊடகங்களைக் கட்டுப்படுத்த அரசாங்கம் எடுக்கும் முயற்சிகள் குறித்தும் இந்நாட்களில் பேசப்படுகிறது. இது அமைப்பை மாற்றுவதற்கான நமது முயற்சிகளுக்கு இடையூறாக இருக்கும்.

ஊடகங்கள் தகவல்களை தெரிவிக்க சுதந்திரமாக இருக்க வேண்டும். அதேவேளையில் ஊடகவியலாளர்களும் பொறுப்புக் கூற வேண்டும்.

எனவே, ஊடகங்கள் மூலம் தவறான தகவல் பரிமாற்றத்தை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். ஊடகங்களை ஒழுங்கு படுத்துவது அல்ல. ஊழலை ஒழிக்கும் பணியில் ஊடகச் செயற்பாடு முக்கியமானது. ஏனெனில், மோசடி மற்றும் ஊழல் தொடர்பான தகவல்களை அம்பலப்படுத்துவது வெகுஜன ஊடகங்களே.

இலங்கைக்கான ச்ர்வதேச நாணய நிதியத்தால் அங்கீகரிக்கப்பட்ட 2.9பில்லியன் அமெரிக்க டொலர் கடனை நர்டு 8 தவணைகளில் பெற்றுக்கொள்ளும் என்று முன்னர் கூறப்பட்டது.

அதன் படி, தற்போதுள்ள அமைப்பில் மாற்றத்தைக் கொண்டுவருவதற்கான சீர்திருத்தங்கள் ஒவ்வொரு ஆறுமாதங்களுக்கும் சர்வதேச நாணயநிதியத்தால் மதிப்பீடு செய்யப்படும். சம்பந்தப்பட்ட சீர்திருத்தங்கள் முறையாக செயல்படுத்தப்படாவிட்டால், மீதமுள்ள கடன்தவணை விலக்குகளை நிறுத்தி வைக்க நிறுவணம் ஒப்புக் கொள்கிறது.

அப்படியானால், உலக வங்கி, ஆசிய வளர்ச்சி வங்கி போன்ற நிறுவனங்கள் வழங்கும் கடன் உதவி வசதிகளும் நின்றுவிடும்.

எனவே, இந்தச் சீர்திருத்தங்களை நிதிநிதியம் சொல்வதால் மட்டும் செயற்படுத்தாமல் தொடர்ந்து செயற்படுத்த வேண்டும்.

நாட்டில் பொருளாதார நெருக்கடியை ஏற்படுத்திய தற்போதுள்ள இந்த முறைமை மீண்டும் அவ்வாறான அனர்த்தம் ஏற்படாத வகையில் மாற்றியமைக்கப்பட வேண்டும். சர்வதேச நாணய நிதியத்துடன் இலங்கை ஒப்புக் கொண்ட வேலைத்திட்டத்தின் கரு அது என்பதை மீண்டும் கூற வேண்டும். (தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்.நீதவான்...

நீதிமன்ற நியாயாதிக்க எல்லைக்குள் என்பதனால், கொலை தொடர்பிலான வழக்கு விசாரணைகள் யாழ்.நீதவான் நீதிமன்ற நீதவான் ஏ.ஏ. ஆனந்தராஜா முன்னிலையில் நடைபெற்று வருகிறது.

கடந்த திங்கட்கிழமை இளைஞனின் உடற்கூற்று பரிசோதனை யாழ். போதனா வைத்தியசாலையில் மேற்கொள்ளப்பட்டபோது, நீதவான் நேரில் சென்று சட்ட வைத்திய அதிகாரியிடம் பரிசோதனை தொடர்பில் கேட்டறிந்து கொண்டார்.

தொடர்ந்து யாழ்ப்பாண சிறைச்சாலைக்கு சென்று, சிறைச்சாலை அத்தியட்சகர் மற்றும் உத்தியோகஸ்தர்களிடமும் வாக்குமூலங்களை பெற்று இருந்தார்.

இந்நிலையில், குறித்த வழக்கு இன்று மன்றில் எடுத்து கொள்ளப்படவுள்ள நிலையில், சிறைச்சாலை அத்தியட்சகர், சட்ட வைத்திய அதிகாரி மற்றும் கொலையான இளைஞனுடன் கைதான மற்றைய இளைஞன் ஆகியோர் மன்றில் தோன்றி தமது சாட்சியங்களை பதிவு செய்யவுள்ளனர்.

அதேவேளை சட்ட வைத்திய அதிகாரி, உடற்கூற்று பரிசோதனை அறிக்கையையும் மன்றில் சமர்ப்பிப்பார் என எதிர்பார்க்கப்படுகிறது. (ம-7)

# பாதுகாப்புக்கான...

சுக்கான செலவுத்தலைப்பு (103) 68 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது.

குழு நிலை விவாதத்தின் பின்னர் பி.ப 6.00 மணியளவில் அகில இலங்கை தமிழ் காங்கிரஸின் பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் குறித்த செலவுத் தலைப்புக்கு வாக்கெடுப்பைக் கோரினார். இதற்கமைய நடத்தப்பட்ட வாக்கெடுப்பில் குறித்த செலவுத்தலைப்புக்கான ஒதுக்கீட்டுக்கு ஆதரவாக 76 வாக்குகளும் எதிராக 8 வாக்குகளும் அளிக்கப்பட்டன. (ம-7)

# சந்தேகநபரை...

சேர்ந்த தமிழ்ப் பொலிஸ் உத்தியோகத்தர் உயிரிழந்துள்ளார்.

ஜா-எல பிரதேசத்தில் இச்சம்பவம் நேற்று இடம்பெற்றுள்ளது,

இதில் ஜா-எல பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் 26 வயதுடைய சாவகச்சேரியைச் சேர்ந்த பொலிஸ் உத்தியோகத்தரே உயிரிழந்தவராவார்.

ஜா-எல பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்த சந்தேக நபரை நேற்று நீதிமன்றில் ஆஜர் படுத்துவதற்காக அழைத்துச் செல்ல தயாராகும்போதே இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

ஹெரோயின் போதைப்பொருள் சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட சந்தேக நபரை நீதிமன்றத்திற்கு அழைத்துச் செல்வதற்காக பொலிஸ் உத்தியோகத்தர்கள் குழுவொன்று பொலிஸ் கப் வண்டிக்கு அழைத்து வந்துள்ளனர்.

அப்போது, சந்தேக நபர் கைவிலங்குடன் அருகில் உள்ள ஆற்றில் குதித்து தப்பி ஓட முயன்றபோது, சந்தேகநபரை கைது செய்ய மூவருடனான பொலிஸ் அதிகாரிகள் குழுவும் ஆற்றில் குதித்துள்ளது.

இதன்போது குறித்த அனர்த்தம் இடம்பெற்றுள்ளது.

இவர் ஜா -எல பொலிஸ் நிலையத்துக்கு இடமாற்றம் பெற்று வந்து 3 1/2 வருடங்கள் ஆவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்நிலையில், தப்பிச் செல்ல முயன்ற சந்தேக நபர் மீண்டும் ஜா-எல பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். (ம-7)

# மாவீரர் நினைவுத்...

நீதிமன்ற உத்தரவுடன் நேற்று இடிக்கப்பட்டது.

வாழைச்சேனை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட தரவை மாவீரர் துயிலும் இல்லத்தில் யுத்தத்தில் உயிர் நீத்தவர்களின் குடும்ப உறவுகளால் நினைவு தூபி ஒன்று அமைக்கப்பட்டு வந்தது.

குறித்த நினைவுத் தூபி அனுமதி எதுவும் பெறாமல் சட்டவிரோதமான முறையில் அமைக்கப்பட்டு வருவதாகவும், தூபி அமைக்கப்படும் நடவடிக்கைகளை உடனடியாக நிறுத்துமாறும் தெரிவித்து பொலிஸாரால் வாழைச்சேனை நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

அதனடிப்படையில் குறித்த தூபியை அகற்றுமாறு நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்தது. இதனையடுத்து, குறித்த நினைவு தூபியை பொலிஸார் இடித்துள்ளனர். (ம-7)

# கண்ணிவெடி...

இச்சம்பவத்தில் கிளிநொச்சி அக்கராயன் பிரதேசத்தைச் சேர்ந்த (MAG) மனிதநேய கண்ணிவெடி அகற்றும் பிரிவில் பணியாற்றி வரும் 48 வயதுடைய இரண்டு பிள்ளைகளின் தந்தையான கந்தையா சிவநாதன் என்பவரே உயிரிழந்தவராவார்.

நேற்றுக் காலை 6.10 மணியளவில் ஆடைத்தொழிற்சாலையில் பணியாற்றுகின்ற பணியாளர்களை ஏற்றுகின்ற பேருந்து மோட்டார் சைக்கிளில் வந்தவர்களுடன் மோதி விபத்து ஏற்பட்டுள்ளது.

பேருந்து எந்த சமிக்ஞைகளுமின்றி திடீரென திரும்பியதாகவும் இதனால் பேருந்துடன் மோதி தான் தூக்கி வீசப்பட்டதாகவும் மற்றையவர் பேருந்து சில்லுக்குள் சிக்குண்டு இறந்ததாகவும் காயமடைந்தவர் தெரிவித்தார்.

இது தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-7,299)

# இனவாதக்...

பாராளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற 2024 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டத் தில் பாதுகாப்பு அமைச்சு மற்றும் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு ஆகியவற்றுக்கான செலவுத் தலைப்புக்கள் மீதான விவாதத்தில் உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

இவ் விடயம் தொடர்பில் மேலும் அவர் தெரிவிக்கையில்,

“இலங்கை பல்லின சமூகம், தமிழ், சிங்களம் மற்றும் முஸ்லிம் சமூகங்களை ஒன்றிணைத்து தேசிய நல்லிணக்கம் உறுதி செய்யப்பட்டால் தான் தேசிய பாதுகாப்பை உறுதி செய்ய முடியும்.

ஆட்சியில் இருந்த ஆட்சியாளர்கள் தமது இருப்பை தக்க வைத்துக் கொள்வதற்கு கட்டவிழ்த்து விட்ட இனவாதங்களினால்தான் இந்த நாடு 30 வருட கால யுத்தத்தை எதிர்கொண்டது.

யுத்தம் முடிவடைந்து 14 ஆண்டுகள் நிறைவடைந்துள்ள நிலையிலும் இனங்களுக்கிடையில் தேசிய நல்லிணக்கம் உறுதிப்படுத்தப்படவில்லை.

வடக்கிலுள்ள தமிழ் அரசியல் கட்சிகளை தடை செய்ய வேண்டும் என்று குறிப்பிடும் ஆளும் தரப்பின் உறுப்பினரது மூளையை பரிசோதனை செய்ய வேண்டும்.

இவர்கள் ஒருபோதும் தேசிய நல்லிணக்கத்தை எதிர்பார்க்கவில்லை. இனவாதம் தோற்றம் பெறும் வகையில்தான் கருத்துக்களை தெரிவிக்கிறார்கள்” என்றார். (ம-7)

# அரசியல்...

ஏது.

ஆகவே பேரவையின் செயற்பாடுகள் தொடர்பில் ஆராய விசேட தெரிவுக் குழு ஸ்தாபிக்கப்படும்.

அத்துடன் அரசியலமைப்பு பேரவை நிறைவேற்றுத்துறையின் பகுதி இல்லை என்று சுமந்திரன் குறிப்பிடுவதை ஏற்க முடியாது. நிறைவேற்றுத்துறையின் ஒரு அங்கமாகவே பேரவை உருவாக்கப்பட்டது. ஆகவே, அரசியலமைப்பு பேரவை நிறைவேற்றுத்துறையின் அங்கமாகவே செயற்பட வேண்டும்.

அரசியலமைப்பின் பேரவையின் உறுப்பினராக சித்தார்த்தனை நியமிக்கும் பரிந்துரை தொடர்பில் ஆளும் மற்றும் எதிர்தரப்பு ஒருமித்த தீர்மானத்தை எடுத்தால் என்னால் ஒரு கட்டளையை பிறப்பிக்க முடியும் என்று குறிப்பிட்ட ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, அரசியலமைப்பு பேரவையில் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸிற்கு முன்னுரிமை வழங்க முடியாது என்றும் தெரிவித்தார். (ம-7)

லக்கி 7 VIP
திகதி 2023.11.23
சீட்டிழுப்பு இலக்கம் 133
W 8 1 9 1 3 9 W

தன நிதானய
திகதி - 2023.11.23
சீட்டிழுப்பு இலக்கம் - 1337
Z 29 44 47 51 Z
12466

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3549
சீட்டிழுப்பு திகதி 23.11.2023
J 04 29 51 70
J 25662

ஹந்தஹன
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2023.11.23
சீட்டிழுப்பு இலக்கம் 616
விருச்சிகம் 52 56 59 60 விருச்சிகம்
29516 23

மஹஜன சம்பத
திகதி 2023/11/23
சீட்டிழுப்பு இலக்கம் 5307
Q 9 3 2 3 5 1

மெகா பவர்
திகதி 23/11/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1655
T 09 17 19 27 76
24631

உத்தியோகபூர்வ முடிவுகள்
சுபிர் தன சம்பத
திகதி 23.11.2023 வெற்றி வாரம் 015 வர்ணம் ஊதா
M 5 1 6 0 3 7
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 22,043,795.20
DLB தொலை பேசி : 011-2 333 546-47 Web : www.dlb.lk

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2281 வர்ணம் பச்சை
சீட்டிழுப்பு திகதி 2023.11.23 தினம் வியாழக்கிழமை
42 46 53 71 V
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 57,776,084/-

சனிதா
திகதி 2023.11.23 வெற்றி வாரம் 4442 வர்ணம் சிவப்பு
12 23 45 60 Q
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 64,737,708.00

ராசி
சீட்டிழுப்பு வாரம் 3993 வர்ணம் கபிலம்
சீட்டிழுப்பு திகதி 2023.11.23 தினம் வியாழக்கிழமை
04 16 23 47
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 3,000,000/-

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
E 32 10 20 25 44
1457 2023.11.23 வியாழன்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 468,707,704.20

அட கோடிபதி
வியாழக்கிழமை
வெற்றி வாரம் : 2107
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 71,189,576/-
சீட்டிழுப்பு திகதி : 2023.11.23
22 33 48 57 M

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாராட்டி வாழ்த்துகின்றோம்




(17956)

2023 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் 187 புள்ளிகளைப் பெற்று யாழ்.புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயத்தில் 1 ஆம் இடத்தைப் பெற்ற

## செல்வி பிரகாசன் நேஷிக்கா

அவர்களைப் பாராட்டி வாழ்த்துவதுடன் மேலும் கல்வியிலும் ஏனைய கலைகளிலும் சிறந்து விளங்க வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர் :

தாத்தா, அம்மம்மா, பெரியப்பா, பெரியம்மா

# அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பும் நன்றி நவிலலும்



தோற்றம் 15 . 04 . 1953

மறைவு 01 . 11 . 2023

கடந்த 01.11.2023 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத்தின் குலவிளக்கு

## அமரர் நாகேந்திரம் சகுந்தலாதேவி

அவர்களது சிவபதப்பேறு குறித்த அந்தியேட்டிக் கிரியைகள் நாளையதினம் 25.11.2023 சனிக்கிழமை காலை 6.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெறும். அந் நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து அன்னாரது இல்லத்தில் மு.ப 11.00 மணியளவில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் கலந்து கொண்டு அன்னாரது ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திப்பதோடு தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

மேலும் அன்னாரின் பிரிவுச் செய்தி அறிந்து நேரில் வந்தும் தொலைபேசி ஊடாகவும் எமக்கு ஆறுதல் கூறியவர்களுக்கும் மற்றும் சமூக வலைத்தளம், துண்டுப்பிரசுரம், பனர்கள் மூலம் தமது அனுதாபங்களைப் பகிர்ந்தோருக்கும் இன்னும் பல்வேறு வழிகளிலும் உதவிய அயலவர், உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

2 ஆம் குறுக்குத்தெரு,
பருத்தித்துறை.

(C-7712)

தகவல்:
குடும்பத்தினர்


வெளிநாடுகளுக்கான விரைவு பொதிகள் DHL

சகல நாடுகளுக்கான கடிதங்கள் 3-5 நாட்களில் ஒப்படைக்கப்படும்.

சகல நாடுகளுக்கான பொதிகள் 5-7 நாட்களில் ஒப்படைக்கப்படும்.

திருமுருகன் கொம்நெற்
321, K.K.S வீதி யாழ்ப்பாணம்.
0777 554 528 (17945)



வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378
076 097 3127


" உயிர் வாழ்வோர் நாட்டில் நான் ஆண்டவர் திருமுன் வாழ்ந்திடுவேன். " [ தி.பா. : 116:9 ]

# 20 ஆம் ஆண்டு நினைவுகள்

## அமரர் எட்வேட் றீற்றா



அன்பு என்ற வார்த்தையின் உருவம் நீ அம்மா!
ஆழம் கான முடியாத தேடல் நீ அம்மா!
அண்டி வந்தோரை அரவணைக்கும் ஆலவிருட்சம் நீ அம்மா!

ஆதரவு கொடுப்பதில் தேற்றும் தோழி நீ அம்மா!
இனிமையாக பழகிடும் உத்தமியும் நீ அம்மா!
நற் குணங்கள் நிறைந்த அருமருந்தும் நீ அம்மா!
தேடற்கரிய ஆழ்கடல் முத்தும் நீ அம்மா!
இல்லற ஆன்மீக சங்கமம் நீ அம்மா!
தந்தைக்கு உகந்த அன்பு மனையாளும் நீ அம்மா!

இல்லத் தலைவியாய் அறம் காத்தவள் நீ அம்மா!
இறைவன் அழைப்பேற்று விடை தந்தாய் நீ அம்மா!
ஆண்டுகள் இருபது கடந்தும் நினைவில் வாழ்பவள் நீ அம்மா!
பசுமையான நினைவுகள் நிழலாட வருவாய் நீ அம்மா!
ஆண்டவன் அடியினில் அர்ப்பண மலர் நீ அம்மா!
விண்ணக வாழ்வில் அருகிருப்பாய் நீ அம்மா!

மண்ணில் : 07.10.1948

விண்ணில் : 24.11.2003

"அன்னம்ஸ்"
ஓடக்கரை வீதி, சங்கானை.

(17876)

குடும்பத்தினர்

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 24.11.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org